மெய்ப்பொருள்
காண்பதறிவு

# கோபுரம்

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்
## மூன்றாம்தள விருந்தினரகம்

## திறப்புவிழா மலர்

## 24.06.2011




அகவை 70







**கொழும்புத் தமிழ்ச்சங்கம்**

07, 57வது ஒழுங்கை, கொழும்பு - 06. தொ.பேசி : 0112 363759

மின்னஞ்சல் : tamilsangam@sltnet.lk இணையத்தளம் : www.colombotamilsangam.org

மெய்ப்பொருள்
காண்பதறிவு

## கொழும்புத் தமிழ்ச்சங்கம்

# கோபுரம் மலர்

**24.06.2011**

தொகுப்பு:
**சி. பாஸ்க்கரா**


# கொழும்புத் தமிழ்ச்சங்கத் தமிழ்வாழ்த்து

வாழியஎம் தமிழ்ச்சங்கம் வளர்ந்தெழுக தமிழ்மொழியே
ஆழிசூழும் இலங்கைதனில் அழகுதுறை நகர்கொழும்பில்
ஏழிசைபோல் தமிழ்மொழியும் இசைகொண்டு வாழியவே
இயலிசைநா டகமோடின் கலைபலவும் இசைந்தொலிக்க

அழகொழுகும் வனப்புகளும் இளமையொடு இனிமைதரப்
பழகுதமிழ் பயின்றமுதம் பொழிந்துநிதம் பொலிந்திடவே
பல்லோரும் பணியாற்றப் பரிந்தேற்றி வளம்பாச்சித்
தொல்லுலகில் புகழ்மணக்கத் தொழுதேத்தும் தமிழணங்கே

முச்சங்க முழுப்பணியை முழுவுலகும் முழங்கவைக்கும்
எம்சங்கம் தமிழ்ச்சங்கம் என்றென்றும் வாழியவே
சங்கொடுதா மரைஏடும் சிறந்திடுமெம் இலச்சினையே
மங்கலநல் அறிவாய்மெய்ப் பொருள்கண்டு வளருதியே.

பாவாக்கம். பன்மொழிப்புலவர்
த.கனகரத்தினம்



**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5613805*
*Fax -2361438*
*rkmcey@gmail.com*

# ஆசிச் செய்தி



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிஞர்கள் தங்குவதற்காக ஐந்து அறைகள் மூன்றாவது மாடியில் கட்டி முடிக்கப்பட்டு, அவ்வறைகள் திறந்து வைக்கப்பட இருப்பதையும், அந்நாளையொட்டி 'கோபுரம் மலர்' வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ்வுற்றேன்.

இவ்விரு நிகழ்வுகளும் சீரும் சிறப்புடன் நிறைவேற, இறைவன் தன் அருளையும், ஆசியையும் வழங்க வேண்டுவதோடு, என் அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் கையேடு அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என எண்ணுகின்றேன். மேலும், இந்தக் கட்டடத்திற்கு உதவிய அனைவருக்கும், விழாவினை ஏற்பாடு செய்தவர்களுக்கும், கையேடு வெளிவர உழைத்த அனைவருக்கும் என் அன்பும், வாழ்த்தும் உரித்தாகுக.

கொழும்பு.
என்றும் இறைபணியில்,
***09.06.2011***

(சுவாமி சர்வரூபானந்த)
சுவாமி சர்வரூபானந்த
தலைவர்

உ
சிவமயம்





**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
**குருமகா சந்நிதானம்**
*(ஆதீன கர்த்தர்)*

**நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்**
*நல்லூர், யாழ்ப்பாணம்,, இலங்கை.*
*தொலைபேசி / தொ.நகல் : 021-2222870*







# ஆசிச் செய்தி

*அன்பே உருவான இறைவன் பாதம் பணிந்து*

*கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் மூன்றாம் மாடியில் அறிஞர்கள் தங்குவதற்கான ஐந்து அறைகள் கட்டிமுடிக்கப்பட்டது மிகவும் உவகையான செய்தியாகக் காணப்படுகின்றது. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போது தலைவராக உள்ள திரு.மு. கதிர்காமநாதன் அவர்களின் அர்ப்பணிப்புச் சேவை பாராட்டிற்குரியது. குறுகிய காலத்தில் இந்த கட்டட நிர்மாணம் நிறைவடைந்தமை மகிழ்வைத் தருவதுடன் செயலாளர் திரு.ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், பொருளாளர் திரு.செ.திருச்செல்வன் மற்றும் ஆட்சிக் குழுவினரின் பாரிய பங்களிப்புடன் கட்டடத் திறப்புவிழா நடைபெறுவது எனது பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரித்தாகட்டும்.*

*இந்தத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் கையேட்டு மலருக்குப் பொறுப்பாகவுள்ள சி.பாஸ்க்கராவின் ஒரு முயற்சி சிறந்த முயற்சியாகக் காணப்படுகின்றது.*

*தமிழ்ச்சங்கம் தமிழுக்கும் தமிழ்ச்சமூகத்திற்கும் தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்தது. அந்த முயற்சி மேலும் மேலும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.*

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

உ
சிவமயம்

பிரம்மஸ்ரீ. சண்முகரத்தின சர்மா
ஸ்ரீபால செல்வ விநாயக மூர்த்தி கோவில்
பிரதம குருக்கள் - சமாதான நீதவான்
சிவாகம திலகம் - சிவகாம பூஷணம்
தலைவர் - ஸ்ரீ ராம கான சபா
தலைவர் - அகில இலங்கை சிவப் பிராமண சங்கம்
11/9, கப்பித்தாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி கோயில் : 2687111
வீடு : 2693922

*Brahmmashri B. Shanmugaratna Sarma*
*Sri Bala Selva Vinayaga Moorthy Temple*
Chief Priest - Justice of the Peace
Sivakama Thilagam - Sivakama Bhooshanam
President : Shri Rama GanaSabha
President : All Ceylon Siva Brahmana Sabha
11/9, Captain's Garden, Colombo-10.
Telephone Temple : 2687111
Residence : 2693922

# கொழும்பு ஸ்ரீபால செல்வ விநாயகர் மூர்த்தி கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பா.சண்முகரத்தின சர்மாவின் ஆசிச்செய்தி



கொழும்பு மாநகரில் தமிழரின் கலை கலாசாரத்தைப் பேணிக்காக்கும் தமிழ்ச் சங்கக் கட்டட ஆரம்ப அடிக்கல் வைபவத்தில் கலந்து கொண்ட எனக்கு தமிழ்ச் சங்க கட்டடத்தொகுதி பூர்த்தி விழாவில் ஆசியுரை வழங்குவதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

தமிழ்ச் சங்கம் அதன் இலட்சிய வழியில் தொடர்ந்து செயற்பட்டு அதன் பணிகள் சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீபால செல்வ விநாயகர் அருள் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க தமிழ் வளர்க தமிழ்ச் சங்கம்

நன்றி

பா.சண்முகரத்தின சர்மா J.P
பிரதமகுருக்கள்,
ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில்,
கப்பித்தாவத்தை,
கொழும்பு 10.

# வாழ்த்துக்கள் வளர்ச்சிக்கு தூண்டுதலாகும்



**மு. கதிர்காமநாதன்**
*தலைவர்,*
*கொழும்புத் தமிழ்ச் சங்கம்.*

*கால நெடு வழியின் கதவுகள் திறந்தன; வளர்ச்சியின் கதவுகள் மேலும் திறக்கப்படவுள்ளன.*

*வளர்ச்சி என்பது இயங்கும் வடிவம்; முயற்சி என்பதும் இயங்கும் வடிவம்; முயற்சியால் வளர்ச்சியும் வளர்ச்சியால் முயற்சியும் இணைந்த செயல் வடிவமாகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கோபுர நிறைவு அமைந்துள்ளது.*

*தமிழ் வல்லாரின் நீண்ட கனவின் கட்டட வடிவத்தின் நிறைவு தமிழ் நெஞ்சங்களை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.*

*'நினைவு நல்லது வேண்டும்'*
*கனவு மெய்ப்படல் வேண்டும்'*
*என்பதன் ஈட்டல் இன்றைய விழாவின் கோபுரவாயிற் கதவுகளாகத் திறக்கின்றன.*

*தமிழின் இனிமையைச் சுவைக்கும் ஒவ்வொருவருக்கும் இன்றைய நிகழ்ச்சி இனிமைக்கு மேலும் இனிமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.*

*இந்த நிறைவுப் பணியை முன்னெடுக்க உதவிய அனைத்து நல்ல, உயர்ந்த உள்ளங்களும் நன்றிக்கும், பாராட்டுக்களுக்கும் உரியவை.*

*இப்பணியில் இருத்தி ஏற்றம்பெற வைத்த, என் இனிய ஆட்சிக்குழு உறுப்பினர்களை நெஞ்சார வாழ்த்துகிறேன்.*

*வாழ்த்துக்கள் வளர்ச்சிக்கு மேலும் தூண்டுதல்களாகுக!*

# கட்டட மலர் கண்டு களிப்புறுகிறேன்!



**ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்,**
பொதுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

"காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் நன்மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித்தர வேண்டும்"

என்று தனக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமாக அன்னைபராசக்தி யிடம் காணி நிலம், மாடங்கள் வேண்டும் என்று கேட்டான் மகாபாரதி.

அன்னை அனைத்தும் அளித்தாள் - பின்னர் எமது துர்ப்பாக்கியம் சிலவற்றை அழித்தாள்.

எம்மைப் பொறுத்தவரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாள். இன்னமும் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

அதன் ஒருபடிதான் இன்று முற்றும் அழகாக முடிந்து திறந்து வைக்கப்படும் மூன்றாவது மாடியில் புதிதாக அமைத்திருக்கும் விருந்தினர் தங்கும் ஐந்து அறைகள்!

வாரிக் கொடுத்த வள்ளல்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன இப்புதிய அறைகள்!

இந்த வள்ளல்களை அடையாளம் கண்டு, அறைகளை நிர்மாணிக்கும் பணியைச் சிறப்பாகச் செய்தவர் எமது தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் அவர்கள்.

அன்னாருடன் தோளோடு தோள் நின்று கருமமே கண்ணாகச் செயலாற்றியவர்கள் எமது நிதிச் செயலாளர் திரு.செ.திருச்செல்வனும் நிலைய அமைப்புக்குழுச் செயலாளர் திரு.மா.சடாட்சரனும் ஆவார்கள்.

இதற்கு மேலாக எமது அனைத்துக் கட்டடப் பணிகளையுமே தனது சொந்தப் பணிபோல் மேற்பார்வை செய்து சிறப்பாகப் பணியாற்றிய முன்னாள் நிலைய அமைப்புச் செயலாளர் திரு.மா.தேவராஜா அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றி கூறாவிடின் எனது கடமையில் இருந்து தவறியவனாவேன்.

அத்துடன் இவர்கள் அனைவருடன் இணைந்து செயற்பட்ட நிலைய அமைப்புக் குழுவினர், அனைத்து ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!

Karthigesu
Sivathamby
BA (SriL) Ph.D. (Birm),
D.Litt (Honoris Causa) Jfn
Professor Emeritus (Jfn)

23A, Vandervert Place,
Dehiwala, Sri Lanka.
Phone : 0(94)113150803
Email : sivathamby32@gmail.com



# வாழ்க! வளர்க!

**கா. சிவத்தம்பி**
*தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

கொழும்புத் தமிழ்ச்சங்க கட்டடத்தின் 3ஆம் மாடி கட்டுமான வேலைகள் நிறைவேறியமை குறித்து மேற்கொள்ளப்படும் விழாவுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள திரு. மு. கதிர்காமநாதன் அவர்கள் வாழ்த்துக்குரியவர் ஆகிறார்.

கொழும்புத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு.இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களினதும், பொருளாளர் திரு. செ. திருச்செல்வன் அவர்களினதும் ஆட்சிக்குழு அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்புடன் இப்பணி நிறைவேறியுள்ளது. இம்மலர் வெளியீட்டுக்குப் பொறுப்பாளர்களாக வுள்ள சங்கத்தின் உப பொருளாளர் திரு.சி. பாஸ்கரா அவர்கள் ஓயாத உழைப்புக்கு பெயர் பெற்றவர் ஆவார்.

இந்த அணியின் ஊக்கமும் அணித் தலைவர் கதிர்காமநாதனின் உழைப்பும் தொலைநோக்கும் கொழும்புத் தமிழ்ச்சங்க வரலாற்றில் இன்னொரு கட்ட வளர்ச்சிக்கு உதவி உள்ளன. உண்மையில் இது இவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணி என்று கூடச் சொல்லலாம். இன்று கொழும்பின் மிகமுக்கிய தமிழ் நிறுவனமாக விளங்குவது கொழும்புத் தமிழ்ச்சங்கம்தான். கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஆற்றிவரும் பண்பாட்டுப் பணி பெரியது. இப்பணிக்காக இவர்களை வாழ்த்துவதிலும் பார்க்க இவர்களுக்கு எமது நன்றிக் கடனைத் தெரிவிப்பதே மேல்.

மெல்லென ஓடும் ஓடை நீர்போல கொழும்பு தமிழ்பேசும் மக்களின் தமிழ்ப் பசுமைக்கு உதவும் இந்நிறுவனம் மேலும் வளர்வதாக.

இருந்தமிழே உன்னால் இருந்தேன்
இமையவர்தம்
விருந்தமிழ் தம் என்றாலும் வேண்டேன்
- தமிழ்விடு தூது -

மிக்க அன்புடன்

# வாழ்த்துச் செய்தி



**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்**

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் இவ்வாண்டு தலைவர் திரு.மு. கதிர்காமநாதன் தலைமையில் தமிழ்ச்சங்கம் அடைந்து வரும் பன்முக வளர்ச்சியின் ஒரு பரிமாணமாக இன்று சங்க கட்டடத்தில் ஐந்து புதிய அறைகள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்படுகின்றன. இம்முயற்சியினை முதலில் உளமாரப் பாராட்டுகின்ற அதேவேளை, தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் அவர்களையும் செயலாளர் திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், பொருளாளர் திரு.செ.திருச்செல்வன், மற்றும் ஆட்சிக் குழுவினரையும் பாராட்டுகின்றேன். இக்கட்டட முயற்சியானது தமிழ்ச் சங்கத்தின் நிகழ்ச்சிகளை நடாத்திச் செல்லப் பல்வேறு வழிகளில் உதவும் என்பது எதிர்பார்ப்பு.

பொதுவாக தமிழ் மக்களுக்கும் விசேடமாக இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள், பாடசாலைப் பிள்ளைகள் போன்றோருக்கும் கொழும்பில் அதிக செலவின்றி ஏராளமான இலக்கிய மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திவரும் தமிழ்ச்சங்கத்திற்கு இந்த கட்டட முயற்சி ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

நாட்டின் இன்றைய சமூக பொருளாதார நிலையில் இம்முயற்சி ஒரு மகத்தான சாதனை என்றே சொல்லவேண்டும். இச்சாதனை தரும் மகிழ்ச்சியில் முன்னாள் தலைவர் என்ற வகையில் நானும் பங்கு கொள்கின்றேன்.



# வாழ்த்து

**பேராசிரியர் சபா. ஜெயராசா**

திறத்தல், வளர்த்தல், மேலோங்கச் செய்தல், மேம்பாடு கொள்ள நிறைத்தல் என்றபடி நிலைத்தொடர் வளர்ச்சியின் நுழைவாயிலாக இன்றைய தோரணவாயில் அமைந்து சிறக்க எனது இனிய நல்வாழ்த்துக்கள்.

நீண்ட நெடுவழியின் மணிமகுடச் சூட்டலாக அமையும் கட்டடக் கனவின் நிறைவு தமிழன்னையின் செம்பொற் கமல அடிகளின் புதுமலர்ப் பரவலாக அமைந்து சிறந்து நிறைந்து சீர் பெறுக.

செம்மொழியாம் தமிழுக்கு வளமிடல், தமிழ்வழி அறிவுக்கு நிதியிடல், தமிழியல் ஆய்வுக்கு அரங்கிடல், தமிழின் சுவையொடு கலந்த சான்றோருக்குத் தவிசிடல் என்ற செவ்வழிகளை மேலும் பெரிதாக்கவும் விரிவாக்கவும் கதவுகள் திறந்தெழல் வேண்டும்.

தமிழின் புலமைச் சுவையை நுகரவும், ஆக்கமலர்ச்சி வடிவங்களில் ஊறித் திளைக்கவும், ஆழ்ந்து அகன்ற தமிழியல் வாசிப்பில் நிறைந்து தோய்ந்தெழவும் செம் பொற் கபாடம் திறந்து மேலோங்கி நலன் தர வாழ்த்துக்கள்.

சபா. ஜெயராசா.

# வாழ்த்துச் செய்தி



**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
*தகைசார் வாழ்நாட் பேராசிரியர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்*

*கொழும்புத் தமிழ்ச்சங்கம் கடந்த சில ஆண்டுகளில் மிக வேகமாகத் தன் பணிகளை ஆற்றி வருகின்றது. பெருந் தொகையான நிகழ்ச்சிகளைச் சங்கம் ஒழுங்கமைத்துச் சமூகப்பணி ஆற்றி வருகின்றது. சங்கக் கட்டடத்திலே ஒரு விருந்தினர் விடுதி அமைத்து, அதனை இன்று வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளனர். தலைநகரிலே நடைபெறும் கருத்தரங்குகள், பணியவைகள், மாநாடுகள் ஆகியவற்றிலே பங்குபற்றுவதற்குப் பன்னாட்டு வளவாளர்கள், பேராளர்கள் வந்துசெல்கிறார்கள். அவர்களிற் சிலர் இவ்விருந்தினர் விடுதியிலே தங்கிச் செல்ல வாய்ப்பளிக்கலாம். சங்கம் பன்னாட்டுத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும். கொழும்புக்குச் சென்றால் தமிழ்ச் சங்க விருந்தினர் விடுதியிலே தங்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட வாய்ப்புண்டு.*

*விருந்தினர் விடுதி ஊடாகவும் தமிழ்ச்சங்கம் தன் பணிகளைச் சிறப்புற ஆற்ற என்னுடைய அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.*

# தமிழ்ச்சங்கம் தழைத்தோங்குக!



**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

உலகை உய்விப்பவள் நம் தமிழ்த்தாய்.
அறம், பொருள், இன்பத்தை உள்வாங்கி
இம்மைப் பயனையும்,
வீட்டினை விளக்கம் செய்து மறுமைப் பயனையும்,
என்றும் தருவபள் அவள்.
தமிழன்னைக்கு ஆற்றும் தொண்டு
உலகிற்கு ஆற்றும் தொண்டாம்.
அத்தொண்டினை, தலைநகரில் தமிழ்ச்சங்கம்
சிறப்புற நடாத்தி வருகிறது.
கல்விப் பணி, நூலகப்பணி, இலக்கியப்பணி என,
நீளும் அவர்தம் பணிகள்
தமிழ்த்தாயைச் சிகரத்தில் ஏற்றுவன.
தலைநகரில் தமிழரின் தனித்த அடையாளச் சின்னமாய்
தமிழ்ச்சங்கம் விளங்குகின்றது.
அன்பர் திரு. கதிர்காமநாதன் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றுள்ள
தற்போதைய நிர்வாகக் குழு
வீரியமாய்ச் செயற்படுவதறிந்து மகிழ்கிறேன்.
அவர்களின் அரிய முயற்சியால் நிறைவடைந்திருக்கும் புதிய கட்டடத்தொகுதி
தமிழ்ச் சங்கத்தின் பெருமையை
மேலும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.
தமிழ்ச் சங்கம் உயர தமிழ்த்தாய் உயர்வாள்.
அவர்தம் பணி மேன்மேலும் உயர
என்னை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி
பாடிப் பரவும் பரம்பொருளை
வேண்டிப் பணிகிறேன்.

இன்பமே எந் நாளும் துன்பமில்லை.

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ...ක / ...ிப்பாளர் / ...ector | 2552643 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2552825 | ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail | hindudir@yahoo.com |
| ...දු / ...ாது / ...neral | 2552641 | | | වෙබ් අඩවිය / இணையதளம் / Website | www.hindudept.gov.lk |
| ...ග් අංකය / ...து இல. / ... No. | | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 2011.06.10 |




# வாழ்த்துச் செய்தி

**சாந்திநாவுக்கரசன்**
பணிப்பாளர்,
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

தமிழறிஞர்கள் கூடி சுதந்திரமாகக் கலந்து பேசி தமிழை வளர்க்கக் கூடிய இடமாக கொழும்புத் தமிழ்ச்சங்கம் அமைகின்றது. பொது மக்களின், அறிஞர்களின் அறிவுத்திறனை வளர்க்கும் முகமாக நூலகம், மண்டபங்கள், மாணவர்களின் கற்கை அபிவிருத்தி தொடர்பாக வாசிப்பு மண்டபங்கள், தங்குமிட அறைகள் இச்சங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. கலைநிகழ்ச்சிகள், இலக்கியச் சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள், நூல் விற்பனைகள், பிரார்த்தனைக் கூட்டங்கள் என பல நிகழ்வுகள் இச்சங்க மண்டபத்தில் நடைபெறுகின்றன.

கடந்த சில வருடங்களாக எமது திணைக்களத்தின் ஆய்வரங்குகள் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்புடன் இச்சங்க மண்டபத்திலேயே நடைபெற்றன. இக்காலங்களில் பேராளர்கள் கலந்து கொள்வதற்காகப் பல்கலைக்கழக மாணவர்களின் தங்குமிட வசதிகள் தொடர்பாக அறைகளும் மண்டபங்களும் பயன்படுத்தப்பட்டன.

பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் தலைமையில் உள்ள ஆட்சிக்குழுவினரது பாரிய முயற்சியினால் மேலும் ஐந்து அறைகள் தற்சமயம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திறப்புவிழா தொடர்பாக கோபுரம் மலர் தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்படுகின்றது. இது தொடர்பாக எனது மட்டற்ற மகிழ்ச்சியையும் வாழ்த்தினையும் தெரிவிப்பதுடன் இவர்களின் பணி தொடர திணைக்களத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள்.

சாந்திநாவுக்கரசன்

பணிப்பாளர்

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248-1/1, காலி வீதி, கொழும்பு-04.



# வாழ்த்துப்பா

கலாபூஷணம்
**பன்மொழிப்புலவர் - த. கனகரத்தினம்**
சங்கத் துணைக் காப்பாளர்

**(வெண்பா)**

*1.* ஆண்டு அறுபதோ டொன்பது ஆகுநாளிற்
பூண்ட பணியெலாம் பூரணமாய் - நீண்டபுகழ்
துங்கக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் வாழியவே
சங்கத் தமிழும் தழைத்து.

*2.* தாபகராம் பொன்னம் பலமுதலி யார்தாமும்
தீபமாய்த் தொண்டாற்றிச் சேர்ந்தாரே - ஞாபகமாய்
நல்ல பணியதனால் நாடறிந்த நற்செயலர்
வல்லகந்த சாமிநாமம் வாழி.

*3.* வானுயர வோங்கிநிமிர் மாடி வளரறைகள்
தானுயரத் தம்நிதியிற் தந்தனரே - கோனுயரக்
கோடி குடியுயரும் கோலமதாய் வாடகையும்
தேடிவரும் தென்றலுடன் சேர்ந்து.

**(அகவற்பா)**

வானுயர மாடி வளர்ந்து நிற்கத்
தானுயர் சேவை தளர்ந்திடா தென்றும்
கோனுயர் கோலம் கொண்ட சங்க
ஆட்சிக் குழுவினர் அரும்பணி போற்றி
கதிர்காமக் கந்தன் கழலடி போற்றும்
காட்சிக் கினிய தலைவ! வாழி
காணும் செயல்கள் கருத்திற் கொண்டே
நாளும் பணிசெயும் செயலர் வாழி
வீணிற் பணமும் விரய மாகா
விதிமுறை தவறாபெருநிதிச் செயலர்
பேறெனப் போற்றி மகிழ வாழி
வித்தகர் குழாமென விளங்கி நிற்கும்
இத்தகை அறிஞர் குழாமும் வாழி
காவல் தெய்வமெனக் காத்து நிற்கும்
காப்பாளர் தாமும் வாழி வாழி
பல்லோர் பயன்பெறப் பனுவல் வழங்கும்
நல்லதோர் நூலகம் நல்லறிவு வழங்க
வல்ல ஈசன் தாள்பணிந் தேத்திச்
சொல்லும் வாழ்த்தும் சுவைபட வாழியே.

T. Kanagarathnam

# தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

கவிக்கோ. டாக்டர்

**எஸ். அப்துல்ரகுமான்,** எம்.ஏ., பிஹெச்.டி

தலைவர்

வக்ஃப் இல்லம், எண் 1, ஜாஃபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை-600 001




## வாழ்த்துச் செய்தி

**கவிக்கோ.டாக்டர் எஸ்.அப்துல் ரகுமான்,** எம்.ஏ.பிஹெச்.டி
தலைவர்.

புகழ் பெற்ற கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதிய கட்டடம் கட்டிடத் திறப்புவிழா செய்ய இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். திரு.மு. கதிர்காமநாதனைத் தலைவராகவும், திரு.இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களைப் பொதுச் செயலாளராகவும், திரு. திருச்செல்வம் அவர்களைப் பொருளாளராகவும் பெற்றிருக்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கம் தொடர்ந்து தமிழ்ப்பணியாற்றிச் சிறக்க வாழ்த்துகிறேன். விழாவையொட்டி திரு.சி.பாஸ்கராவை மலர்க்குழுத் தலைவராகக் கொண்டு மலர் ஒன்று வருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். மலர் தமிழ் மணத்தோடு வெளிவர வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



**எஸ். தில்லைநாதன்**
*பிரதம ஆசிரியர்*
*தினகரன்*

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்றப் பாடல்களுக்கொப்ப பணிபுரிந்து வரும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஏழு தசாப்தப கால வரலாற்றை தன்னகத்தே கொண்டு இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பல பணிகளை புரிந்து தலை நிமிர்ந்து இருக்கிறது.

இன்று மூன்று தசாப்த போர் முடிவடைந்த இந்த காலப்பகுதியில் தமிழரும், தமிழ்ப்பண்பாடும், கலாசாரமும் அழியாமல் பேணிப் பாதுகாப்பது எமது கடமையாகும். சினிமாக்களிலும், விளம்பர ஊடகங்களிலும், இன்னும்,இன்னும் எத்தனையோ வழிகளில் தமிழ்மொழி செத்துக் கொண்டிருக்கிறது. உயிரோட்டமான தமிழும், எமது கலாசாரமும் புதையுண்டு வருகிறது.

கடந்த ஏழு தசாப்த கால கட்டத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பல பணிகளை செய்திருக்கிறது இன்றும் பல புதிய பரிணாமங்களில் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் செயற்படும் பொதுச் செயலாளர், நிதிச் செயலளார் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களும் செயல் படுகிறார்கள்.

குறுகிய காலத்தில் மேல் மாடியில் ஐந்து புதிய அறைகளை கட்டுவித்து அதன் திறப்பு விழாவிற்கு ஒரு பதிவேட்டையும் வெளியிட முன்வந்திருக்கும் தமிழச் சங்கத்தை பாராட்டுவதோடு அதனை முன்னின்று செயல்படுத்தும் மலராசிரியரைப் பாராட்டுவதோடு எனது வாழ்த்துச் செய்தியினையும் சேர்த்துக் கொள்வதற்கு நன்றி கூறுகிறேன்.

வாழ்க! வளர்க! தமிழ் மொழி

# சேவை மேலும் சிறக்கட்டும்



**வீ.தனபாலசிங்கம்**
*பிரதம ஆசிரியர்*
*தினக்குரல்*

தலைநகரில் இன்று தமிழ் மக்களின் கலாசாரக் கேந்திர நிலையமாக விளங்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கம் அண்மைக் காலத்தில் அதன் பணிகளை வியக்கத்தக்க வகையில் விரிவாக்கம் செய்து வருவதைக் காணும்போது பெரும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான சேவைகளைத் தன்னலமின்றிச் செய்வதில் தங்களை அர்ப்பணித்திருக்கும் ஒரு நிருவாகம் நெடுகவுமே தமிழ்ச்சங்கத்தை வழிநடத்தி வருவதே அதன் மகத்தான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்திருக்கின்றது. அந்தவகையில் தலைவர் திரு.முத்தையா கதிர்காமநாதனின் மேலான வழிநடத்தலுடன் கூடிய நிருவாகம் பல்வேறு வகைகளிலும் சேவைகளை விரிவாக்குவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அவரின் பணிகளுக்கு பொதுச் செயலாளர் ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன், நிதிச்செயலாளர் திருச்செல்வம் மற்றும் உதவி நிதிச்செயலாளர் சி.பாஸ்கரா மற்றும் பிரதான நிருவாகிகளின் அயராத ஒத்துழைப்புக் கிடைப்பதால் கொழும்புத் தமிழ்ச்சங்கம் மேலும் துரிதமான வளர்ச்சியைக் காணமுடிந்திருக்கின்றது.

இன்று இடம்பெறுகின்ற தமிழ்ச்சங்கத்தின் விருந்தினர் விடுதி விரிவாக்கல் பகுதியின் திறப்புவிழா தற்போதைய நிருவாகத்தின் சிறப்பான சேவைக்கு ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இத்தகைய சேவைகளை மேலும் பெருக்கி தமிழ்ச்சங்கமும் அதன் நிருவாகத்தினரும் தமிழ்மக்களின் நலன்கள் மீதான தங்களின் அரிப்பணிப்பைத் தொடர்ந்தும் வெளிக்காட்டி பேரும் புகழும் பெற எனது வேண்டுதல்கள்.

*68, எலிஹவுஸ் ரோட்*
*கொழும்பு-15.*
*14.06.2011*

# தமிழ் சங்கத்தின் வளர்ச்சிக்கு உளமாரப் பாராட்டுவோம்.



**ஆர். பிரபாகன்**
*பிரதம ஆசிரியர்*
*வீரகேசரி - தேசிய நாளிதழ்*

கொழும்புத் தமிழ்ச் சங்கம் இலக்கிய வளர்ச்சியில் தன்னிகரற்ற பணியை ஆற்றிவருகின்றது. அந்த வகையில் அதன் பணி தமிழ் ஆர்வலர்கள் மத்தியிலும் புத்திஜீவிகள் மத்தியிலும் பெரிதும் பாராட்டப்பட்டு வருகின்றது.

இலக்கியச் சந்திப்புக்கள், நூல் அறிமுக விழாக்கள், அறிவோர் ஒன்று கூடல் என அதன் பணிகள் விரிவடைந்துள்ள அதேவேளை சமூக மேம்பாட்டு நிகழ்வுகளிலும் கொழும்பு தமிழ்ச் சங்கம் தம்மாலான பங்களிப்பைச் செய்து வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

கடந்த காலங்களில் நாட்டில் நெருக்கடி நிலவிய பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருட்களை சேகரித்து வழங்குவதிலும் நிவாரண உதவிகளை பகிர்ந்தளிப்பதிலும் தனது சக்திக்கு எட்டிய வரையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சீரிய பங்களிப்பை செய்துள்ளது.

அந்த வகையில் தமிழ் மக்களின் அறிவுத் தாகத்தைப் போக்குவதோடு மாத்திரம் நின்றுவிடாது பல்வேறு வகையிலான சமுதாயப் பணியிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளமை அதன் வளர்ச்சிக்கு மேலுமோர் படிக்கல்லாக அமைந்துள்ளது.

தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியைக் கண்டு தமிழ் ஆர்வலர்களும் தம்மாலான உதவிகளை வழங்கி அதன் முன்னேற்றத்துக்கு மேலும் மெருகூட்டி வருகின்றனர். அந்த வகையில் சிறியதோர் கட்டடத்தில் உருவான கொழும்பு தமிழ்ச் சங்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

மேலும், மூன்றாவது மாடியின் ஐந்து அறைகளைக் கொண்ட புதிய கட்டடத் தொகுதி தற்போதைய தமிழ்ச்சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன் அவர்களின் அயராத உழைப்பில் பூர்த்தியடைந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர்களது ஒத்தாசையுடனும் கொடையாளிகளின் ஆதரவுடனும் கட்டிமுடிக்கப்பட்டுள்ள இக்கட்டடத் தொகுதி அதன் அபிரிதிமான வளர்ச்சிக்கு மேலும் சான்று பகர்வதாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

சர்வதேச ரீதியில் கூட கொழும்புத் தமிழ்ச் சங்கம் என மார்தட்டிக் கூறுமளவுக்கு அதன் வளர்ச்சி அமைந்துள்ளமையைக் கண்டு நாம் அனைவரும் உளமாரப் பாராட்ட வேண்டியது எமது கடப்பாடாகும்.



# வாழ்த்துச் செய்தி

**ஆர். பாரதி**
*வாரமலர் பிரதம ஆசிரியர்,*
*ஆசிரியர் தினக்குரல்*

*தலைநகரிலிருந்து கொண்டு தமிழ்ப்பணி புரிந்து வரும் கொழும்புத் தமிழ்ச் சங்கம், அதன் சேவைகளின் ஒரு பகுதியாக கொழும்பு வரும் தமிழர்களின் தங்குமிடப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அறைகளை அமைத்திருப்பது வரவேற்கப்படவேண்டிய ஒரு பணியாகும். இந்தப் பணியை விஸ்தரிக்கும் வகையில் மேலும் ஐந்து அறைகள் குறைந்த காலத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுவது தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகளில் காணப்படும் உத்வேகத்துக்கு உதாரணமாக உள்ளது.*


*தனிப்பட்ட தேவைகளுக்காக மட்டுமன்றி அலுவலக வேலைகளுக்காகவும் கொழும்பில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவும், வெளிமாவட்டங்களிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கொழும்பு வரும் தமிழர்கள் தமக்கேற்ற வகையில் குறைந்த கடடணத்தில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடிகளையே எதிர்கொள்கின்றார்கள். கட்டுப்படியாகக் கூடிய கட்டணத்தில் பெறக்கூடியதாக உள்ள விடுதி வசதிகள் தமிழ்ச்சூழலில் இல்லாதிருப்பதும் மற்றொரு குறைபாடாகும்.*

*இந்த இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய வகையில் தமிழ்ச் சங்கம் அமைத்துள்ள அறைகள் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாடு போன்றவற்றுக்காக கொழும்பு வந்த பிறநாட்டு தமிழ் அறிஞர்கள் பலர் இங்குதான் தங்கியிருந்தார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.*

*இந்த நிலையில் தங்குமிட வசதிக்கான தேவையும் அதிகரித்துள்ள நிலையிலேயே அதனைப் பூர்த்தி செய்யும் வகையில் மேலும் ஐந்து அறைகளை அமைப்பதற்கான தீர்மானத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கம் எடுத்துள்ளது. இதன் தலைவராக உள்ள திரு.மு. கதிர்காமநாதனின் காலத்தில் தமிழ்ச்சங்கம் கண்டுள்ள முன்னேற்றங்களில் இது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தப் பணியில் தமிழ்ச்சங்க செயலாளர் இரகுபதி பாலசிறீதரன், பொருளாளர் திருச்செல்வம் ஆகியோரின் பணியும் குறிப்பிடப்படவேண்டியது. இந்த அறைகளை அமைப்பதற்கான நிதி உதவியை வழங்கியவர்களும் இந்த இடத்தில் பாராட்டப்படவேண்டியவர்கள்.*

*இந்த அறைகள் திறக்கப்படுவதை முன்னிட்டு மலர் ஒன்று வெளியிடப்படுவது தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்வாகும். இந்த மலருக்கான பொறுப்பாசிரியரின் பணிக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*அன்புடன்*



# வாழ்த்துச் செய்தி

**தே. செந்தில்வேலவர்**
*பிரதம ஆசிரியர்*
*தினகரன் வார மஞ்சரி / யாழ் பதிப்பு*

*கடந்த ஏழு தசாப்த காலமாக தலைநகர் கொழும்பில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பினை ஆற்றிவரும் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமையில் இயங்கும் ஆட்சிக்குழுவினர், பல புதிய சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து பல அரிய பணிகளைச் செய்து வருகின்றனர்.*

*அந்த வகையில் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மாடியில் புதிதாக ஐந்து அறைகள் நிர்மாணிக்கும் பணியில் அதிக அக்கறை செலுத்தி குறுகிய காலகட்டத்தில் நிர்மாணப் பணியை பூர்த்தி செய்திருக்கும் தலைவர் மு. கதிர்காமநாதன், பொதுச்செயலாளர், ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், நிதிச் செயலாளர் செ. திருச்செல்வம் ஆகியோர் உட்பட ஆட்சிக் குழுவினரின் பணி பாராட்டக் கூடிய விடயமாகும்.*

*ஐந்து அறைகள் திறப்புவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் 'கையேட்டி'ற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மன மகிழ்வு கொள்வதுடன் இந்த கையேட்டிற்கு பொறுப்பாக இருந்து செயல்படும் மலர் ஆசிரியரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.*

*வாழ்க! வளர்க! தமிழ் மொழி.*

# இலங்கையில் எழுந்து நின்ற கோபுரம்



**மா.அ.சுந்தரராஜன்**
*கம்பன்கழகம்*
*ராமநாதபுரம்.*

இலங்கைத் தேசத்தில் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இலக்கம் ஏழு, ஐம்பத்திஏழாம் ஒழுங்கை பகுதியில் தமிழர்களுக்குப் பெருமை தரும் விதமாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு கட்டடம் எழுப்பப்பட்டது. அது ஈழத்தமிழ் மக்களுக்கு உலக அளவில் எழுப்பப்பட்ட ஒற்றுமையின் சின்னமாகும் என்று சொன்னால் அது மிகையாகாது. உள்ளூர் தமிழ் மக்களுக்கும், வெளியூர் தமிழ் மக்களுக்கும் ஒன்று கூடி தமிழ் அறிவை வளர்த்துக் கொள்ளும் உறைவிடமாக அமைந்து உள்ளது. பலதரப்பட்ட தமிழ் மக்கள் ஒன்று கூடும் பொழுது, புதிய உறவுகள், புதுப்புது ஆய்வுகள், புதிய சிந்தனைகள், புதிய தமிழ் ஆராய்ச்சிகள், தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், கருத்தாக்கங்கள், சமுதாயம் குறித்து விழிப்புணர்வுகள், பத்திரிகையாளர்களின் சிந்தனைகள், செய்திகளின் விமர்சனங்கள், சிறுகதைப் படைப்பாளிகளின் விமர்சனங்கள், தமிழ்மொழியின் சீர்திருத்த எழுத்துக்கள் மேற்கூறிய நடவடிக்கைகளை ஆய்வு செயும் கூடமாக அமைந்துள்ளது. இந்த தமிழ்ச்சங்க கட்டடம் ஈழமக்களின் ஒற்றுமைச் சின்னமாக விளங்குகின்றது. பல பகுதிகளிலிருந்து வரும் தமிழ் அன்பர்கள், மற்றும் வெளிநாட்டில் இருந்து வரும் தமிழ் அன்பர்கள் விருந்தினர்கள், தங்கிச்சென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற சிந்தனை மரியாதைக்குரிய தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் நெஞ்சத்தில் உதயமானது. அதன் விளைவுதான் இன்று கம்பீரமாக எழுந்து இருக்கும் ஐந்து அறைகள். இதில் பல வெளிநாட்டு நண்பர்கள் வந்து தங்கிப் போவதற்கும், கலந்து பேசுவதற்கும் புதிய எண்ணங்களை உருவாக்குவதற்கும், தோழமைகளை உருவாக்குவதற்கும், பழைய உறவுகளை புதுப்பிப்பதற்கும் இந்த அறைகள் பாலமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. உண்மையிலே தலைவருடைய முயற்சிக்கு நன்றி சொல்லவேண்டும். இந்த ஆண்டு ஆரம்பத்தில் சர்வதேச எழுத்தாளர்களின் மாநாட்டிற்கு வந்தபொழுது தமிழ்ச்சங்க கட்டடத்தில் பல விதமான அரங்கங்களை உருவாக்கி அதில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். நாங்களும் அதில் கலந்து கொண்டு பயன் அடைந்தோம்.

அந்த அறைகளில் வெளிநாட்டு நண்பர்கள் தங்கித் தோழமையை வளர்த்தார்கள். எண்ணங்கள் உருவாகின்றபோது செயல்கள் ஆரம்பம் ஆகும். அந்த செயல்கள் உருவாகும் இடமே, நாம் எல்லாம் தங்கும் இடமான சங்கம் தான். நம்முடைய உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் உள்வாங்கி நமக்கு ஒரு புதிய உற்சாகத்தை தருவது சங்க அறைகளே. அப்படிப்பட்ட அரிய பெரிய சாதனையை திரு.கதிர்காமநாதன் செய்து உள்ளார் என்றால் அவரைப் போற்றி புகழவேண்டும். நம்முடைய உணர்வுக்கும், கவுரவத்திற்கும் சங்கக் கட்டடம் இருந்தால்தானே சமுதாயத்தில், தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு மரியாதை கிடைக்கும் அதை தமிழ்ச்சங்கத்தினர் நின்று செயல்படுத்தி உள்ளார்கள் என்றால் அவர்கள் உணர்வுகளுக்கு தலைவணங்கி வாழ்த்துகின்றேன்.

தமிழ், பீனிக்ஸ் பறவை, மாதிரி வளர்ந்து, கொண்டு வருகின்றது. உணர்வும், உணர்ச்சியும் தலைமைப் பண்புக்கு தகுதியாகும். உண்மையும், நேர்மையும் வழிநடத்தி செல்வதற்கு தகுதியாகும். இந்த நான்கு பண்பும் ஒருங்கே அமைந்து விட்டால் மனதில் வைராக்கியம் உருவாகிவிடும். அந்த இடமே நாம் கூடும் இடமாகும். தமிழ் சமுதாயத்தை ஒன்று கூட்டும் இடமாகவும், உணர்வுகளை உருவாக்கும் கோவிலாகவும், உணர்வுகளை உருவாக்கும் கோவிலாகவும், உணர்ச்சிகளை உறவாக்கி, சத்தியத்தையும், அஹிம்சையும் போதிக்கும் போதி மரமாகவும் தமிழ்ச்சங்கம் உருவாக்கிய அத்துணை நல் நெஞ்சங்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்தினை காணிக்கையாக்குகின்றேன். ஈழத்தில் உள்ள அத்துணை தமிழ் அமைப்புகளும் ஒன்று கூடவும் தமிழ் வகைகள் தனியாக இருந்தாலும் தமிழ் உணர்வு ஒன்றுதான். நாம் அனைவருமே தமிழ் தாய் பெற்றெடுத்த தமிழ் மக்களே. இந்த சங்கக் கட்டடத்தை மாமன்ற கட்டடமாக உருவாகவும், அந்த கோபுர உச்சியில் ஏற்றுகின்ற தமிழ்க் கொடியானது உலக தமிழ் மக்களின் ஒற்றுமையை அடையாளமாக இருக்கவேண்டும் என்பதே என்வாழ்த்து.

வாழ்க பல்லாண்டு வளர்க தமிழ் உணர்வு.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பேரவை துவக்கம் (1983)
கவிஞர் : எம்.ஜலாலுதீன் (செயலாளர்)
(எண்.442, 7வது தெரு, சிவகாமி அம்மையார் காலனி, வியாசர்பாடி,சென்னை-39)



# வாழ்த்து

தமிழ்ச் சமூகத்தின் பேச்சாகவும்
தமிழ் மக்களின் மூச்சாகவும்
விளங்கும் கொழும்பு தமிழச்சங்கம்
வீறு கொண்டு முழங்கும் சங்கமாக
இருப்பது கண்டு மகிழ்கிறோம்

தமிழறிஞர்கள் தங்கும் இடமாகவும்
தமிழ்த் தென்றல் வீசும் காவாகவும்
தமிழ்த் தாயின் குடிலாகவும்
தமிழ் அன்பர்களின் விடியலாகவும்
விளங்கும் தமிழ்ச்சங்கம் வாழ்க

தமிழகத்தின் அகமாகவும்
அதன் முகமாகவும் விளங்கும்
கொழும்பு தமிழ்ச் சங்கம்
மென்மேலும் உயர்ந்திட அது
உயர உயர தமிழும் உயர்ந்திடும்
என்ற எண்ணம் எனக்குண்டு

தமிழ்நாட்டில் இல்லாத செம்மையான
தமிழ்ச்சங்கம் இலங்கையில்
இருப்பது கண்டு பெருமகிழ்வு கொண்டேன்
நம் கலாச்சாரம் காக்கும் அங்கமாகவும்
சங்கத் தமிழ்வளர்க்கும் சங்கமாகவும்
கவிதைத்ய தமிழ் - அறிவியல் தமிழ்
பயிலும் கலா சாலையாகவும்
அறிவின் வளர்ச்சிக்கு நூல்நிலையமும்
அறிவியல் வளர்ச்சிக்கு கணினியில் பயிலும்
அமைப்பும் இங்கு இருப்பது கண்டு வியந்தேன்
தூய தமிழில் பேசும் பேச்சை கண்டு
மனம் குளிர்ந்தேன்

தமிழ் உச்சரிப்பில் உவகை கொண்டேன்
கொழும்பு தமிழ்ச்சங்கம் பல்வேறு
அரங்குகளுடன் மேன்மேலும் வளர்ந்திட
வல்லநாயகன் அருளட்டும். நம்மின்
தமிழ் பேசும் இனங்களெல்லாம்
பேதம் நீங்கி ஒற்றுமையுடன் நிலவ
வாழ்த்துகிறேன்

தமிழகத்திற்கும், என் தொப்புள் கொடி
என் சகோதர சகோதரிகள் என்
வாழ்நாளில் மறக்க முடியாத சர்வதேச
தமிழ் மாநாட்டில் கண்டு களித்த
அந்த தருணங்களும்
என்றென்றும்என்னால்மறக்கமுடியாதவை
கடல் கடந்து வாழ்ந்தாலும்
என் உடல் கடந்து ஆன்மா
உங்கள் அன்பையும், உங்கள் பண்பையும்
போற்றும் இது திண்ணம்

மதம் கடந்து, ஜாதிகடந்து
பேதம் இல்லாமல் தமிழ் மொழி
நம்மை இணைக்கும்
அது புது உணர்வை நமக்கு கொடுக்கும்
புதிய உறவை வளர்க்கும்
அந்த வளர்ச்சியில் நம்மின் மொழியும்
நம்மினமும் செழிக்கும்!

இப்படிக்கு
**கவிஞர். எம். ஜலாலுதீன்**

# நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி



**ஜெ.திருச்சந்திரன்**
செயலாளர்,
நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை

*1942ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1945இல் "கொழும்புத் தமிழ்ச் சங்கம்" எனப் பெயர் பெற்று, என்றும் முன்னேற்றப் பாதையிலேயே தடம் பதித்து வரும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இன்று 70வது அகவையில் காலடி வைத்திருக்கிறது.*

*1975இல் ஆரம்பிக்கப்பட்ட கட்டடப் பணி பல்வேறு கட்டங்களாக வளர்ச்சி கண்டு இன்று அப் பணிகள் பூரணப்படுத்தப்படுகின்றமை மிகுந்த மன நிறைவை தருகிறது.*


*தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோளை அடைவதற்கு, அது தன் பணிகளை திறம்பட மேற்கொள்ள வருவாய் தரும் வழிகளையும் கண்டறிந்து செயற்பட வேண்டியது இன்றியமையாததாகும். அக் குறிக்கோள்கள் நிறைவு பெறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.*

*இவ் வகைப் பணிகளுக்கு உதவிய நன்கொடையாளர்கள் அனைவருக்கும் இத் தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நானும் இதில் பங்கெடுத்துக் கொண்டதில் மனநிறைவும், இவற்றை ஒவ்வோர் வழிகளில் சாத்தியமாக்கிய வர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.*

# சில நினைவுகள் - சில பதிவுகள்

**செல்வ திருச்செல்வன்**

*நிதிச் செயலாளர்.*



இன்று கொழும்புத் தமிழ்ச் சங்கம் தன் 70வது அகவையில் காலடி வைத்துள்ளது. எழுபது ஆண்டுகளில் ஒவ்வொரு படியாக, ஒவ்வொரு விதமான புறக்காரணிகளின் தாக்கத்திற்கு உட்பட்டாலும் என்றும் முன்னேற்றப்படிகளிலேயே கால் பதித்துள்ளது. இன்று எமது கட்டடத் தொகுதியின் பின்பகுதி முழுமை பெறுகிறது. மேற்கொண்டு எமது வளாகத்தில் பாரிய கட்டடப் பணிகளுக்கு இடவசதி இல்லை என்ற போதும் ஒரு சில மேம்படுத்தல் பணிகள் மட்டும் எஞ்சி நிற்கின்றன. 70 ஆண்டு வளர்ச்சி, கட்டடப் பணிகளில் முழுமை பெற்ற இந்த நாளில் கடந்த கால நினைவுகள் மனதில் எழுகின்றன.

1988 ஆம் ஆண்டின் பிற்பகுதி என நினைக்கின்றேன் . உருத்திரா மாவத்தையில் சைவ மங்கையர் கழக கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த போது தமிழ்வேள் க.கந்தசாமி அவர்கள் என்னிடம் "கொழும்பு தமிழ்ச் சங்க முன்பக்க கட்டடத்தின் முன்றாம் மாடி கட்டவேண்டும் - முடியுமா?" என்று கேட்டார். அவர் சொன்ன வார்த்தைகள் கூட ஞாபகம் இருக்கிறது.

"காசு கட்டாயம் தருவம். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தருவம். எங்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் காசு சேர்க்கலாம்" என்றார். அவரின் மெல்லிய உருவம் - இவரால் இது சாத்தியப்படுமா என்று நான் யோசித்துக் கொண்டிருந்த வேளையில் விலகி நடந்தவர் சற்று நின்று திரும்பிச் சொன்னார் "எங்கட கூட்டங்கள் முந்தி சைவ மங்கயர் கழகத்தில் தான் நடந்தது இப்ப நாங்கள் இங்க நடத்திறம் முன்னேறிக் கொண்டிருக்கிறம். எங்கட ஆட்கள் உதவி செய்ய வேண்டும்" என்றார். உண்மைதான் அவர் எண்ணம் இன்று ஈடேறி இருக்கிறது.

சில மாதங்களின் பின் நண்பரும், அவருடைய மருமகனும், நிலைய அமைப்பு செயலாளராய் நெடுங்காலம் பணியாற்றியவருமான திரு.மா.தேவராஜா ஊடாக அந்த மெல்லிய உருவம் வழமை போல தன்னுடைய வலிய எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டது. மூன்றாம்மாடி கூரைத்தளத்திற்கான வேலையைத் தொடங்கினோம். முன்பக்க கட்டிடத் தொகுதி முற்றுப்பெற்றது.

அதுவரையில் கொழும்பு தமிழ்ச் சங்க வளாகத்தின் பிற்பகுதியில் இருந்தவர்கள் வெளியேறினார்கள். மாதங்காவத்தை பக்கமாக உள்ள மதிலையும் கட்டி முடித்தோம் அதைத் தொடர்ந்து பின் பக்கத்தில் சங்க அலுவலக பகுதிக்கான கட்டிட கால்கோள் விழா நடைபெற்றது. அந்தப் பணியினை ச.இலகுப்பிள்ளை அவர்கள் தொடர்ந்தார்கள்.

பல நிதிக் கொடையாளர்களின் பங்களிப்போடும், பலரது பெருமுயற்சி யோடும் சங்கரப்பிள்ளை மண்டபம், தற்போதைய நூலகப் பகுதி, நவரட்ணசிங்கம் மண்டபம், 2ஆம் மாடி அறைகள் அதன்பின் சுப்பிரமணியம் மாலதி மண்டபம் ஆகியன நிறைவுபெற்றன. இக் காலகட்டத்தில் நிலையை அமைப்புச்செயலாளர்களாக இருந்த மா.சடாட்சரம்இ மா.தேவராஜா அவர்களது பணிகளும் மிகச் சிறப்பாய் அமைந்திருந்தன.

என்னால் இந்த வளர்ச்சியை பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாலும் பல காரணங்களால் பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை. இருந்தும் இறைவன் சித்தம்போலும்! சூழ்நிலை காரணமாக 2010 இன் இறுதியில் நிதிச் செயலாளர் ஆகும் வாய்ப்புக் கிடைத்தது.

சுப்பிரமணியம் மாலதி மண்டபம் 2006 ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட பின் எவ்வித கட்டுமானப் பணியும் முழுமை பெறவில்லை. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளங்களை ஒழுங்கு முறைப்படுத்தினால் காரியாலய கட்டட தொகுதியை முழுமையாக்கலாம் என தலைவர் மு.கதிர்காமநாதன், பொதுச் செயலாளர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் ஆகியோரிடம் தெரிவித்தபோது உடனடியாக ஒப்புதல் தந்ததோடு, ஆட்சிக் குழுவின் அனுமதியையும் பெற்றுத் தந்தனர்.

43 இலட்சம் ரூபா மதிக்கப்பட்டிருந்த இக் கட்டடப் பணிக்கு ஆரம்பத்தில் 10 இலட்சம் ரூபாவை திருப்பிச் செலுத்தும் முறையில் தாருங்கள் - நிதிக் கொடையாளர்கள் மூலம் இதனை சாத்தியப்படுத்துகிறேன் என்று தலைவர் மு.கதிர்காமநாதன் ஒப்புதல் பெற்ற போது தெரிவித்தார்.

அதற்கமைய மூன்றாம் மாடி கட்டடப் பணிகள் 21-10-2010 இல் ஆரம்பிக்கப்பட்டு இன்று நிறைவடைந்திருக்கிறது. இதில் பங்கேற்ற நிதிக் கொடையாளர்கள் லயன் சண்.குகவரதன்,மனிதநேய மாமணி வி.கயிலாசபிள்ளை, மகாராஜா பூட் புரடக்ஸ், இராஜேஸ்வரி கருணை ஆனந்தன் நம்பிக்கை நிதியம், மன்னார் வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் ஆகியோரை தனி ஒரு ஆளாக இப் பணியில் பங்கேற்க வைத்த எங்கள் தலவைர் மு.கதிர்காமநாதனின் பணியை பாராட்டுவது மட்டுமல்ல இது அவரால் மட்டுமே சாத்தியமாகும் விடயம் என்பதையும் கூறிவைக்க வேண்டும்.

மூன்றாம் மாடி விருந்தினரகம் 30இலட்சம் ரூபாக்குள் கட்டி முடிக்கப் பட்டுள்ளது மட்டுமல்லாது 4ம் மாடி தளத்தில் நீர்ப் பாதுகாப்பு, நீர்த்தாங்கிப் பகுதி போன்ற சகல பணிகளும் முற்றுப்பெற்று அக் கட்டடத்தொகுதி முழுமை பெறுகிறது.

இனி, தமிழ்ச் சங்க வளாகத்தில் எஞ்சி இருக்கும் மேம்படுத்துகை பணிகளான மின்தூக்கியும், முன் வாசல் அலங்கார வளைவு மட்டுமே! அதற்கான நிதிவளமும், கொடையாளிகளின் பங்களிப்புக்கான வாக்குறுதியும் பெறப்பட்டுள்ளது. அதனை விரைவில் சாத்தியமாக்குவோம் என தலைவர் உறுதிபூண்டுள்ளார். அதற்கு ஆட்சிக்குழு தான் வலுச்சேர்க்க வேண்டும்.

இறுதியாக - முன்பக்க கட்டடத் தொதியை முழுமை ஆக்கியதிலும், காரியாலய கட்டடத் தொகுதி 4ஆம் மாடி வேலைகளை முடித்து முழுமை ஆக்கியதிலும் நானும் பங்கு கொண்டேன் என்பதில் பெரு மகிழ்ச்சி அடைவதோடு நிதிச் செயலாளர் என்ற வகையில் எனது கடமைகளை முறையாக மேற்கொண்டேன் என்பதிலும் மன நிறைவு கொள்கிறேன்.

[illegible]



கொழும்புத் தமிழ்ச் சங்கம்.
4 ஆம் மாடி கட்டிடம் [illegible] நிகழ்ச்சி

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
7 [illegible]
8 [illegible]
9. [illegible]

பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

# நிலையமைப்புக் குழு அறிக்கை



**மா. சடாட்சரன்**
*நிலையமைப்புக்குழுச் செயலாளர*

*தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவவும் தலைநகர் கொழும்பில் தமிழர் கலை கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கவும் தலைவர்கள் பலர் கூடி தமிழர் கழகம் தனை நிறுவ அதற்கென தனியிடமின்றி தவித்தனர். இத்தமிழர் கழகம் 1942இல் தமிழ்ச் சங்கமாகி 1950இல் 57வது ஒழுங்கையில் இல.7இல் 42 பேர்ச்சில் அமைந்த தனி வீட்டைச் சொந்தமாக்கியது. சங்கப் பணிகள் சிறக்க இவ்வீடு போதுமானதாக இருக்கவில்லை. 1969லே கட்டடக்கலைஞர் வி.எஸ்.துரைராசாவின் உதவியுடன் வரைபடம் அமைத்து அவ்வரைபடத்திலமைந்த முன்னும் பின்னும் 4 மாடிகள் கொண்ட நீண்ட கட்டடத்தொகுதியைப் பூர்த்தி செய்ய 1970ல் முயற்சித்தனர். அவர்கள் முயற்சி கைகூடவில்லை.*

*மனந்தளராது 1975இல் மீண்டும் இக்கட்டடத் தொகுதிக்கான கால்கோள் விழா நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு.மு.வயிரவப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோவில் பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ சண்முகரெத்தின சர்மா அவர்கள் தெய்வ ஆசிக்கான வழிபாட்டை நிகழ்த்தினார்.*

*பல தலைவர்கள் அன்பு நெஞ்சங்கள் தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரின் செயற்பாடுகளும் இறைவன் திருவருளும் முன் கட்டட முதலிரு மாடிகளையும் அமைக்க உதவின.1990-1991 காலப் பகுதியில் முன்புற 3ம் மாடி கட்டட வேலைகள் சங்க நிதியால் நிறைவு பெற்றது. 1995ல் சங்க அலுவலகப் பகுதிக் கட்டமைப்பு நிறைவுற்றது.*

*சங்க முன்னாள் தலைவர் திரு.பொ.சங்கரப்பிள்ளை குடும்பத்தினர் நூலக விஸ்தரிப்பு கருதி பெருந்தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்தார். இதன் பயனாக நூலக விஸ்தரிப்பிற்கென பின்புற ரெறாசோ பதிக்கப்பெற்ற 1ம் மாடி உருவானது.*

*தொடர்ந்து திரு.பெரியதம்பிப்பிள்ளை விஜயரத்தினம் தலைவராக இருந்தபோது சீகல் புரொப்பட்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.ந.வாகீசனும் மற்றும் கொடைவள்ளல்களும் 2ஆம் மாடித் தொகுதியை உருவாக்க உதவினார்.*

*நவரட்ணசிங்க மண்டபம் விருந்தினர் அறைகள் என கட்டட வளர்ச்சி ஏற்பட்டதுடன் நிதி வளர்ச்சியும் மேற்பட்டு சங்கப் பணிகள் இலகுவாக நடைபெற உதவினர்.*

*தற்போது ஓம்படைச் சபைத் தலைவரும் சுப்பிரமணியம் அன்சன்ஸ் ரகு இன்ரநாஷனல் Pvt, Ltd. நிறுவன உரிமையாளரான திரு.மா.சுப்பிரமணியம் அவர்கள் நூலக படிப்பக சேவையை விஸ்தரிக்க சுப்பிரமணியம் - மாலதி மண்டபத்தை அமைத்து உதவினார். இதனால் நடுப்பகுதியில் உள்ள 3ம் மாடி உருவாகி படிப்பக சேவை விஸ்தரிப்படைந்தது.*

மேலும், 3ம் மாடியில் அமைந்த அறைகளுக்கான தட்டிடும் வேலைகள் 2006ல் ஆரம்பமான போதும் அறைகள் அமைக்கும் பணி தற்போதுதான் நிறைவுறுகிறது. இதனால் பல்லோரும் பயன் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய நிர்வாகத்தின் ஆளுமைமிக்க ஆற்றல் அறைகளுக்கான நிதியை அன்பளிப்பாகப் பெற்றதுடன் அறைகள் அமைக்கும் பணியை குறைந்த செலவில் விரைவாக பூர்த்தி செய்ய உதவியது. அழகிய ஐந்து அறைகள் மாபிள்கள் பதிக்கப்பெற்று அலுமினிய யன்னல் கதவுகள் பிளாஸ்ரிக், மரக் கதவுகளுடன் சிறப்பாகக் காட்சியளிக்கின்றன. அழகிய அலங்கார மின்குமிழ்கள் நவீன மலசல கூடங்கள் இவ் அறைகளை மேலும் மெருகூட்டுகின்றன.

மேற்தட்டிடும் வேலையில் ஏறப்பட்ட ஒழுங்கற்ற தன்மையால் சில இடங்களுக்கு பிளாஸ்ரிக் மேற்தட்டிடப்பட்டுள்ளது. மேல் மாடி மேற்புற மழைநீர் உள்ளே நுழைவதைத் தடுக்க நீர்த்தடுப்பு செய்யப்பட்டுள்ளது. 3ஆம் மாடி மேலே செல்லும் படிக்கும் படிப்பக பக்கச் சுவருக்கும் வெள்ளிக் கைபிடி பொருத்தப்பட்டுள்ளது. நிறைவான வேலைகள் குறுகிய காலத்தில் நடைபெற்றுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இப்பணிக்கென தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. மு. கதிர்காமநாதன்

1. திரு. சண் குகவரதன்
2. திரு. திருமதி வி. கயிலாசபிள்ளை
3. திரு. சி. க. குகநாதன் வேலணை
4. இராஜேஸ்வரி கருணை ஆனந்தன் நம்பிக்கை நிதியம்
5. வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன் குடும்பத்தினர்

ஆகியோரிடமிருந்து உரிய நிதிகளைப் பெற உதவினார். இதனால் அறைகள் அமைக்கும் பணியை இலகுவாகச் செய்ய முடிந்தது.

நிதிச் செயலாளர் திரு. செல்லத்துரை திருச்செல்வன் தமது சரீர உதவிகளுடன் 3ம் மாடி அறைகள் அமைக்கத் தேவையான பொருட்களை பாரந்தூக்கி மூலம் மேலே கொண்டு செல்ல உதவினார். அவர் இவ்வறைகள் அமைக்கும் பணிக்குத் தேவையான மணலை போக்குவரத்துச் செலவின்றி பெற்றுக் கொள்ள உதவினார். அத்துடன் கட்டட வேலைக்குக் தேவையான பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள உதவினார். இதனால் குறைந்த செலவில் மேற்படி வேலையை நிறைவு செய்ய முடிந்தது.

இவ்வறைகளுக்கான சுவர் அமைக்கும் பணியையும் பூச்சு வேலைகளையும் திரு விமலரட்ண என்பவரும் அலுமினிய யன்னல் கதவு வேலைகளை திரு ஜே. ரமேஷ் என்பவரும், மாபிள் பதித்தல் வேலையை திரு. துசித்தாவும் நீர்க் குழாய்கள் அமைக்கும் வேலையை திரு. றஞ்சித் நிறப்பூச்சு வேலையை திரு. குசனந்தனும் ஆற்றினர். இவர்களுக்கு எமது நன்றிகள்.

இப்பணி நிறைவேற ஒத்துழைத்து ஆதரவு தந்த தலைவர், பொதுச் செயலாளர், நிதிச்செயலாளர், ஓம்படைச் சபை உறுப்பினர், ஆட்சிக்குழுவினர் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

சங்க நிலையமைப்புக் குழுவின் திட்டமிட்ட செயற்பாடு இவ்அறைகள் அமைக்கும் பணியை இலகுவாக நிறைவேற்ற உதவியது. நிலையமைப்புக்குழு அங்கத்தவர்களுக்கு எமது நன்றிகள்.

எல்லாவற்றிக்கும் மேலாக முன்னைய நிலையமைப்புக்குழுச் செயலாளர் திரு.மா.தேவராசா அவர்கள் இவ்அறைகள் அமைக்கும் பணியை மேற்பார்வை செய்து உதவினார். சங்க முழுக் கட்டடத் தொகுதியில் 75% வேலைகள் அவரது மேற்ப்பார்வையிலேயே நிகழ்ந்தன. அவருக்கு எமது நன்றிகள்.

மேலும் இவ்அறைகள் அமைக்கும் பணியில் அல்லும் பகலும் அயராதுழைத்த திரு.அ.தெய்வேந்திரம், திரு.தெ.சத்தியசசீலன், திரு.கி.ஜெயராம் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

3ம் மாடி அறை அமைக்கும் பணிக்களை ஆரம்ப விழா 21-10-2010ல் நடைபெற்றது. இவ்விழாவை திரு.சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார். இவ்விழாவில் தலைவர் பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர் உட்பட பல ஆட்சிக்குழு உறுப்பினர் பங்கு பற்றினார்.

11-06-2011ல் சாந்தி செய்யும் வைபவமும் 12-06-2011 காலை 6.00 மணிக்கு பால்காய்ச்சும் வைபவமும் இடம் பெற்றது. இவ்விரு வைபவங்களிலும் தலைவர், பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர் உட்பட ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பங்கு பற்றினர். கட்டட ஆரம்ப விழாவையும் சாந்தி செய்யும் வைபவத்தையும் திரு.சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார். திரு.சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எமது நன்றிகள்.

இன்றைய நாள் எம்மைப் பொறுத்தவரை மிக மகிழ்ச்சியான நாள் காலஞ் சென்ற தமிழவேள் திரு.க.இ.க.கந்தசுவாமி அவர்களின் தமிழ்ச் சங்க கட்டடத் தொகுதிக்கான கனவு நிறைவான நாள். இப்பணியில் சங்க வளர்ச்சியில் புதிய திருப்பம் ஏற்பட்டு சங்கம் தனது சொந்தக் காலிலே நின்று. சிறப்பான சமுதாயப் பணியாற்றும் என்பதலில் எவ்வித ஐயமுமில்லை.

இன்னும் இக்கட்டடத் தொகுதிக்கு மின்னுயர்த்தி அமைக்க வேண்டியுள்ளது. மேலும் மாங்குளத்தில், சங்கப் பணிகளை விஸ்தரிக்க காணிகளும் உள்ளன.

இப்பணிகள் நிறைவுறவும் சங்கப் பணிகள் சிறக்கவும் இறையருளைப் பிரார்த்தித்து நிலையமைப்புக்குழு சார்பில் நிலையமைப்புக்குழுச் செயலாளர் ஆகிய நான் விடைபெறுகிறேன்.

எண்ணிய முடிதல்வேண்டும்
நல்லவே எண்ணவேண்டும்
வாழ்க தமிழ் வளர்க தமிழ்ச் சங்கம்.

# மலராசிரியரின் மனத்திலிருந்து



**திரு. சி.பாஸ்க்கரா** (J.P)
*துணைநிதிச் செயலாளர்*
*மலர் ஆசிரியர்*

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆண்டாண்டு காலமாகப் பல அளப்பரிய சேவைகளைச் செய்து வந்துள்ளது என்றால் அது எவ்வகையிலும் மிகையாகாது. தலைநகரில் தலைசிறந்த சங்கமாக விளங்கும் தமிழ்ச் சங்கம் ஆண்டாண்டு கால வளர்ச்சியில் தன்னிகரற்று திகழ்வதுடன் தலை சிறந்த நூலகம், பல கருத்தரங்குகள், ஆய்வு மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள் நடாத்தக் கூடிய பல மண்டபங்கள் தங்குமிட வசதிகள் என்பவற்றைக் கொண்டு பெருவிருட்சமாக மிளிர்கின்றது. இவ்வகையில் யாம் அறிந்து தொண்டு நிறுவனங்களில் தலை சிறந்தவைகளில் ஒன்றாக நிகழ்கின்றது.

அகவை 70இல் காலடி எடுத்து வைத்துப் பல தலைவர்களைக் கண்ட சங்கம் இன்று திரு. மு. கதிர்காமநாதன் தலைமையில் பொறுப்பேற்றுள்ளது. தலைவர் ஆற்றும் பணி

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற குறளுக்கு அமைய தலைவரின் காலமறிந்து செயற்படுத்தும் திட்டங்கள் எல்லோராலும் வாழ்த்துவதை கேட்கும் போது, "ஒரு தாய் தன்மகனைப் பிறர் பாராட்டும் போது பெற்ற இன்பத்தைப் போல்" எமக்கும் கிடைக்கும் ஆனந்தம் அளவு கடந்ததாக காணப்படுகின்றது.

தலைவரின் புன்முறுவலும் எல்லோரையும் அரவணைத்துப் போகும் மனப்பான்மையும் இவ்வெற்றியினை அடையக் காரணமாகிறது என்றால் மிகையாகாது.

இன்று மூன்றாம் தள விருந்தினர்கம் திறம்பட கட்டி முடிக்கப் பெற்றுள்ளது என்றால்,

"வாய்ப்புக்கள் வழக்கமாய் மாறு வேடத்தில் வரும் என்பதால்
பெரும்பாலானவர்கள் அவற்றை அடையாளம் காண்பதற்கில்லை"

என்ற ஒரு வாசகம் ஒன்று உள்ளது. தலைவர் தனது திறமையால் மாறுவேடத்தில் வந்த வாய்ப்புக்களை கண்டு கொண்டு தனது தனிப்பட்ட செல்வாக்காலும் திறமையாலும் பலருடன் தொடர்பு கொண்டு அவர்களைத் தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடை வழங்கச் செய்தார். நன்கொடை வள்ளளுடன் கதைத்துப் பணம் பெற்ற சகலருடனும் இருந்து அவதானித்தவன் என்ற விதத்திலும் அவரின் பாரிய முயற்சியை அறிந்தவன் என்றவன் என்ற முறையிலும் இதனைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

"இன்ப திராட்சையை பிழிந்து அருந்தும்போது
எவனுடைய ஆத்மா அதன் வருத்தத்தையும்
உணர்ந்து கொள்கின்றதோ அந்த ஆத்மா தான் பரிபூரண ஆத்மா"

என்ற ஒரு வாசகத்தில் காணக் கூடியதாக உள்ளது. அதற்கமைய இன்று. இந்தக் கட்டடம் இன்ப திராட்சை அருந்தும் இடமாக உள்ளது என்றாலும் அதனைச் செய்து முடிப்பதற்கும் சுமந்த துன்பங்களையும் கஷ்டங்களையும் இப்பொன்னான வேளையில் மறந்து விடாமல் நாம் பாராட்ட வேண்டியது எமது கடமை.

இந்தப் பொன்னான வேலையினைச் செய்து முடிப்பதற்குப்
பொருளாளர் திரு. செ. திருச்செல்வம் அவர்கள்

“சிகரத்தை வென்ற சிறந்த மனிதர்கள்
தங்கள் சகாக்கள் உறங்கும் நள்ளிரவிலும்
ஒயாமல் உழைத்தார்கள்”

என்பதற்கு அமைய நேரம் காலம் பார்க்காமலும் தனது உழைப்பு சக்தியை உட்புகுத்தியும் சிதறிய வளங்களையும், வளங்கள் விரயமான வழிகளை தடுத்தும், பிரிந்து இருந்த வளங்களையும் வரவேண்டிய வளங்களையும் சேரவேண்டியதைச் சேர்த்தும். இந்த கட்டட வேலைக்கு தலைமைக்கு உதவியுள்ளதுடன், கோபுரம் மலர் சிறப்பாக வர எனக்கு உதவிய பாரிய முயற்சிகளையும் மறந்து விட முடியாது.

செயலாளர் திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் செயல் வீரனாக இருந்து சகலரையும் அரவணைத்துப் போகும் பண்பினால் சாதிக்கக் கூடியவராக சாதித்தவராக காணப்படுகின்றார்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதானது எங்கும் காணோம்”

என்ற பாரதியார் பாடலுக்கு அமைய அகவை 70இல் காலடி எடுத்து வைத்த தமிழ்ச் சங்கம் பல தலைவர், செயலாளர், பொருளாளர், ஆட்சிக்குழு உறுப்பினர்களால் பாதுகாக்கப் பெற்று வளர்க்கப் பெற்ற சங்கமானது இன்று திரு. மு. கதிர்காமநாதன் தலைமையிலான ஆட்சிக்குழு இக்கட்டட நிர்மாணப்பணியை முடித்ததுடன் சங்க நுழைவாயில் அலங்கார வளைவுக்கு அடிக்கல் நாட்டி ஆரம்பிக்கப் பெற்றது. மின்தூக்கி வேலைக்கான ஆரம்பக் கட்ட வேலைகள் தொடக்கப் பெற்றவை பல விழாக்கள் நடைபெற்றவையினைப் பார்க்கும் போது கடந்த 15 வருடங்களாக ஆட்சிக்குழுவில் உள்ளவன் என்ற வகையில் பாரதியார் பாடலுக்கமைய இக்காலம் ஒரு பொற்காலமாக காணப்படுகின்றது.

நிலையமைப்புச் செயலாளர்,

“மவுனமே ஆற்றல் மிக்க வார்த்தை. பேச்சுத்திறமை உடையவர்களால் அதனை கவனித்து கேட்க இயலும் அதன் நோக்கத்தையும் உட்கிடையான அர்த்தத்தையும் அவர்கள் புரிந்து கொள்கின்றார்கள்.”

இம்மொழிக்கு அமைய பேசாமல் பல காரியங்களைச் செய்து முடித்து தன் திறமையைக் காட்டிக் கொண்டவராக காணப்டுகின்றார்.

மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களில் பலரின் பல சேவைகளும் அர்ப்பணிப்புகளும் இங்கே உள்வாங்கப் பெற்றுள்ளது என்றால் அது மறுக்க மறைக்க முடியாத உண்மை.

கோபுரம் மலர் திறம்பட வருதவற்கு முழு ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் எனக்கு தந்த தலைவரின் முயற்சி போற்றக் கூடியதுடன் பொருளாளர், செயலாளர் நிலையமைப்புச் செயலாளர், திருமதி வசந்தி தயாபரன், திரு. கே. இரகுபரன், திரு. ஆ. குகமூர்த்தி, திரு. ப. க. மகாதேவா ஆகியோர் ஒத்தாசைகளையும் இவ்வேளையில் மறந்து விடமுடியாது.

அதே வேளை தமிழ்ச் சங்க நிர்வாக உத்தியோகத்தர், ஊழியர்கள், அச்சக உரிமையாளர் ஹரி பிரிண்டர் அவர்களையும் இவ்வேளையில் குறிப்பிட்டாக வேண்டும்.

நான் கேட்டுக் கொண்டதற்கு அமைய முதற்பிரதி பெறும் திருஏ.எம்.சுப்பிரமணியம், சிறப்பு பிரதிகள் பெறுபவர்களான சமூகசேவையாளர் க.மு.தர்மராஜா, வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன் விளம்பர அனுசரணை செய்த வெள்ளவத்தை ஜெயச்சந்திரன் உரிமையாளர் , வெள்ளவத்தை சங்கீதா நகைமாளிகை உரிமையாளருக்கும் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

நான் கேட்ட போது மனம் கோணாமல் உடன் ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி கட்டுரைகளை தந்த அனைத்து உள்ளங்களையும் போற்றுவதுடன், எமக்கு இப்பாரிய சாதனைனை நிலை நாட்ட எமக்கு உதவிய தினக்குரல், வீரகேசரி, தினகரன் பத்திரிகையாசிரியர்கள், ஊழியர்களையும், மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் சகலருக்கும் நன்றிகளை தெரிவிப்பதில் பூரிப்படைகின்றேன். இவர்களின் ஒத்துழைப்பு எம்மை இப்பாரிய திட்டத்தில் வெற்றியடைய ஓர் உந்து சக்தியாக இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

"இரவும் பகலும் எதிரெதிரானவை என்று நினைக்கின்றோம்
இல்லை இரண்டும் ஒரே உடலின் அங்கங்கள்
இரவு நாளின் முதுகு பகல் நாளின் முகம்
இன்பமும் துன்பமும் எதிரெதிரானவை என்று நினைக்கின்றோம்
இல்லை இரண்டும் இரவும் பகலும் போன்றவை
முரண்கள் உண்மையின் முரண்கள் அல்ல
அவர்கள் கள்ளக் காதலர்கள்
கண்ணீருக்கும் புன்னகைக்கும் மூலம் ஒன்றுதான்
உண்மையில் ஒன்று இல்லை என்றால் மற்றொன்று இல்லை"

என்ற வாசகத்துக்கு அமைய எதையும் எப்படியும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து வெற்றி பெறுவது எமது நோக்கமாக அமையும். அதுவே எமது குறிக்கோள்.

வாழ்க வளமுடன்

என்றும் அன்புடன்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆட்சிக்குழு உறுப்பினர் 2010/2011

**காப்பளார்**
*பேராசிரியர் கா.சிவத்தம்பி*

**துணைக் காப்பாளர்கள்**
*பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம்*
*திரு.த.கனகரத்தினம்*
*கலாநிதி க.நாகேஸ்வரன்*
*திரு.பெ.விஜயரெத்தினம்*
*பேராசிரியர் அ.சண்முகதாஸ்*

**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை**

**தலைவர்**
*திரு.ஏ.எம்.சுப்பிரமணியம்*

**துணைத் தலைவர்**
*திரு.என்.வீரசிங்கம்*

**செயலாளர்**
*திரு.ஜெ.திருச்சந்திரன்*

**உறுப்பினர்கள்**
*புலவர் அ.திருநாவுக்கரசு*
*திரு.நமசிவாயம்*

**ஆட்சிக்குழு**

**தலைவர்**
*கலாநிதி.மு.கதிர்காமநாதன்*

**பொதுச் செயலாளர்**
*திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்*

**நிதிச் செயலாளர்**
*திரு.செல்லத்துரை திருச்செல்வன்*

**துணைத் தலைவர்கள்**
*பேராசிரியர் சபா ஜெயராசா*
*செல்வி சற்சொரூபவதி நாதன்*
*திரு.ச.இலகுப்பிள்ளை*
*கலாநிதி.வ.மகேஸ்வரன்*
*வைத்திய கலாநிதி.அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன்*
*திரு.ந.கணேசலிங்கம்*

**துணைச் செயலாளர்**
*திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி*

**துணைநிதிச் செயலாளர்**
*திரு.சி.பாஸ்க்கரா*

**உறுப்பாண்மைகுழுச் செயலாளர்**
*திரு.ப.கந்தசாமி மகாதேவா*

**நிலையமைப்புக்குழுச் செயலாளர்**
*திரு.மா.சடாட்சரன்*

**கல்விக்குழுச் செயலாளர்**
*திரு.மா.கணபதிப்பிள்ளை*

**நூலகக்குழுச் செயலாளர்**
*திரு.தி.ஞானசேகரன்*

**இலக்கியக்குழுச் செயலாளர்**
*திரு.எஸ்.எழில்வேந்தன்*

**பதிப்புத்துறைச் செயலாளர்**
*திரு.க.இரகுபரன்*

**பரிசில் நிதியச் செயலாளர்**
*திரு.ஆ.குகமூர்த்தி*

**சமூக மேம்பாட்டுக்குழுச் செயலாளர்**
*வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன்*

**சட்ட ஆலோசனைக்குழுச் செயலாளர்**
*திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா*

**ஆட்சிக்குழு உறுப்பினர்கள்**

*திரு.உடப்பூர் வீரசொக்கன்*
*திருமதி வசந்தி தயாபரன்*
*திரு.இ.சிறிஸ்கந்தராசா*
*திரு.சி.கந்தசாமி*
*திருமதி பத்மா சோமகாந்தன்*
*திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்*
*திரு.க.ஞானசேகரம்*
*திரு.அ.பற்குணன்*
*திருமதி றஜனி சந்திரலிங்கம்*
*திருமதி அ.புவனேஸ்வரி*
*திரு பொ.சந்திரலிங்கம்*
*திரு.க.சுந்தரமூர்த்தி*
*திருமதி.ப.சந்திரபவானி*
*திரு.சி.சிவலோகநாதன்*
*திரு.க.க.உதயகுமார்*
*திரு.க.மகாதேவா*
*திரு.வி.கந்தசாமி*
*திரு.க.நீலகண்டன்*
*சைவப்புலவர்.சு.செல்லத்துரை*

**உள்ளகக் கணக்காய்வாளர்கள்**

*திரு.தி.கணேசராசா*
*திரு.சி.மாணிக்கராஜா*
*திரு.நா.பஞ்சாட்சரம்*

# கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள் 2010 - 2011




**முன்வரிசையில் இருப்பவர்கள்**

திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (துணைச் செயலாளர்), திரு.சி.பாஸ்க்கரா (துணைநிதிச் செயலாளர்), கலாநிதி வ.மகேஸ்வரன் (துணைத் தலைவர்), திரு.செ.திருச்செல்வன் (நிதிச் செயலாளர்), திரு.மு.கதிர்காமநாதன் (தலைவர்), திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் (பொதுச் செயலாளர்), பேராசிரியர் சபா ஜெயராசா,வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன், செல்வி சற்சொரூபவதி நாதன் (துணைத் தலைவாகள்),

**நடுவரிசையில் நிற்பவர்கள்**

திருமதி வசந்தி தயாபரன், திரு.எஸ்.எழில்வேந்தன் (இலக்கியக்குழுச் செயலளர்), திரு.க.சுந்தரமூர்த்தி, திரு.ஆ.குகமூர்த்தி, திரு.ப.க.கந்தசாமி (உறுப்பாண்மைக்குழுச் செயலளர்), திரு.சி.கந்தசாமி, திரு.க.மகாதேவா, திருமதி அ.புவனேஸ்வரி,

**பின்வரிசையில் நிற்பவர்கள்**

வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன் (சமூகமேம்பாட்டுக் குழுச் செயலாளர்), திரு.மா.சடாட்சரன் (நிலையமைப்புக் குழுச் செயலாளர்), திரு.க.ஞானசேகரன், திரு.அ.பற்குணன்

**சமூகமளிக்காதோர்**

திரு.ச.இலகுப்பிள்ளை, திரு.ந.கணேசலிங்கம், (துணைத் தலைவர்கள்), திரு.தி.ஞானசேகரன் (நூலகக் குழுச் செயலாளர்)திரு.மா.கணபதிப்பிள்ளை (கல்விக்குழுச் செயலாளர்),திரு.உடப்பூர் வீரசொக்கன், திரு.க.இரகுபரன், திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன், திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, திருமதி பத்மா சோமகாந்தன், திரு.இ.சிறிஸ்கந்தராசா, திருமதி ரஜனி சந்திரலிங்கம், திரு.பொ.சந்திரலிங்கம், திரு.மதி ப.சந்திரபவானி, திரு.சி.சிவலோகநாதன், திரு.க.க.உதயகுமார், திரு.வே.கந்தசாமி, திரு.க.நீலகண்டன், வைசப்புவர் சு.செல்லத்துரை

# நிலையமைப்புக்குழு 2010 -2011




**இருப்பவர்கள்**

திரு.ஆ.குகமூர்த்தி, திரு.மா.சடாட்சரன் (நிலையமைப்புக் குழுச் செயலாளர்), திரு.செ.திருச்செல்வன் (நிதிச் செயலாளர்), திரு.மு.கதிர்காமநாதன் (தலைவர்), திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் (பொதுச் செயலாளர்), திரு.க.சுந்தரமூர்த்தி, திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (துணைச் செயலாளர்),

**நிற்பவர்கள்**

திரு.அ.பற்குணன், திரு.க.ஞானசேகரன், திரு.எஸ்.பாஸ்க்கரா (துணை நிதிச் செயலாளர்), மலர்க்குழுப் பொறுப்பாளர், திருமதி அ.புவனேஸ்வரி, திரு.க.மகாதேவா

**சமூகமளிக்காதோர்**

திரு.ச.இலகுப்பிள்ளை (துணைத்தலைவர்), திரு.சி.சிவலோகநாதன்

## உபகுழு விபரம்

### உறுப்பாண்மைக்குழு

*திரு.ப.கந்தசாமி மகாதேவா (செயலாளர்)*
*திரு.இ.சிறிஸ்கந்தராசா*
*திரு.அ.பற்குணன்*
*திரு.எஸ்.பாஸ்க்கரா*
*திரு.ச.இலகுப்பிள்ளை*
*திரு.சி.கந்தசாமி*
*திருமதி றஜனி சந்திரலிங்கம்*
*திரு.சி.சிவலோகநாதன்*

### நிலையமைப்பு

*திரு.மா.சடாட்சரன் (செயலாளர்)*
*திரு.ஆ.குகமூர்த்தி*
*திரு.க.ஞானசேகரம்*
*திரு.க.சுந்தரமூர்த்தி*
*திரு.எஸ்.பாஸ்க்கரா*
*திரு.ச.இலகுப்பிள்ளை*
*திருமதி அ.புவனேஸ்வரி*
*திரு.சி.சிவலோகநாதன்*
*திரு.அ.பற்குணன்*

### கல்விக்குழு

*திரு.மா.கணபதிப்பிள்ளை (செயலாளர்)*
*கலாநிதி வ.மகேஸ்வரன்*
*திரு.க.இரகுபரன்*
*வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன்*
*திருமதி வசந்தி தயாபரன்*
*திரு.பேராசிரியர் சபா ஜெயராசா*
*செல்வி சற்சொரூவபதி நாதன்*
*திருமதி ப.சந்திரபவானி*
*திரு.க.க.உதயகுமார்*

### நூலகக்குழு

*வைத்தியகலாநிதி தி.ஞானசேகரம் (செயலாளர்)*
*வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்*
*திருமதி பத்மா சோமகாந்தன்*
*திரு.க.இரகுபரன்*
*திரு.ப.க.மகாதேவா*
*பேராசிரியர் சபா ஜெயராசா*
*திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி*
*திரு.எஸ்.பாஸ்க்கரா*

### இலக்கியக்குழு

*திரு.எஸ்.எழில்வேந்தன் (செயலாளர்)*
*திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி*
*திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்*
*வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்*
*பேராசிரியர் சபா ஜெயராசா*
*திரு.சி.கந்தசாமி*
*திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா*
*திருமதி வசந்தி தயாபரன்*

### பரிசில் நிதியம்

*திரு.ஆ.குகமூர்த்தி (செயலாளர்)*
*திருமதி வசந்தி தயாபரன்*
*திரு.சி.கந்தசாமி*
*திருமதி ப.சந்திரபவானி*
*திரு.ச.இலகுப்பிள்ளை*
*சைவப்புலவர் சு.செல்லத்துரை*
*திரு.சி.சிவலோகநாதன்*

### பதிப்புத்துறை விற்பனைக்குழு

*திரு.க.இரகுபரன் (செயலாளர்)*
*சைவப்புலவர் சு.செல்லத்துரை*
*வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்*
*திருமதி வசந்த தயாபரன்*
*திரு.சி.கந்தசாமி*
*பேராசிரியர் சபா ஜெயராசா*
*கலாநிதி வ.மகேஸ்வரன்*
*செல்வி சற்சொரூவபதி நாதன்*
*திரு.எஸ்.பாஸ்க்கரா*
*திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி*

### சமூகமேம்பாட்டுக்குழு

*வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன்(செயலாளர்)*
*திரு.ஆ.குகமூர்த்தி*
*திரு.ப.க.மகாதேவா*
*வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன்*
*ஷரிபுத்தீன்*
*திருமதி வசந்தி தயாபரன்*
*திரு.சி.சிவலோகநாதன்*
*திரு.எஸ்.பாஸ்க்கரா*
*திரு.மா.கணபதிப்பிள்ளை*
*வைத்தியகலாநிதி ஜின்னாஹ்*
*திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா*
*செல்வி சற்சொரூபவதி நாதன்*

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

மெய்ப்பொருள் காண்பதறிவு

மூன்றாம் தளத்தில் புதிதாக அமைத்த 'விருந்தினரகம்'

# திறப்பு விழா அழைப்பிதழ்

காலம் : 24.06.2011, வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி

ம : திரு. மு. கதிர்காமநாதன்
(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

பிரதம விருந்தினர் : திரு. க.அரசரட்ணம்
(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், போக்குவரத்துப் பிரிவு)



| | | |
|---|---|---|
| மு. கதிர்காமநாதன்<br>தலைவர் | ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்<br>பொதுச் செயலாளர் | மா. சடாட்சரன்<br>நிலைய அமைப்புச் செயலாளர் |

## நிகழ்ச்சி நிரல்

மாலை

| | | |
|---|---|---|
| 5.30 | தமிழ் வாழ்த்து | : செல்வி சிந்துஜா கணேசராஜா |
| 5.40 | வரவேற்புரை | : திரு.மா.சடாட்சரன்<br>( நிலைய அமைப்புச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம் ) |
| 5.50 | தலைமையுரை | : |
| 6.00 | அறிமுகஉரை | : திரு.ஆ.குகமூர்த்தி (பரிசில் நிதியச் செயலாளர், கொ.த.ச) |
| 6.10 | பிரதம விருந்தினர் உரை | : திரு.க.அரசரட்ணம்<br>(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், போக்குவரத்துப் பிரிவு) |
| 6.30 | கட்டிட மலர் வெளியீடு | : |
| | வெளியீட்டுரை | : திரு. சி. பாஸ்கரா (துணை நிதிச் செயலாளர், கொ.த.ச) |
| 6.40 | முதற்பிரதி பெறுபவர் | : திரு.ஏ.எம்.சுப்பிரமணியம்<br>(தலைவர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, கொ.த.ச) |
| | சிறப்புப் பிரதி பெறுபவர் | : 1. சமூக சேவையாளர் க. மு. தர்மராசா<br>2. வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன்<br>(செயலாளர், சமூக மேம்பாட்டுக்குழு கொ.த.ச) |
| 7.00 | கலைநிகழ்ச்சிகள் | : 1. புல்லாங்குழல் இசை– திரு. க. சிவபாலரட்ணம்<br>2. வில்லிசை: கொ.தொண்டர் வித்தியாலய மாணவர்கள்<br>"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" |
| 7.30 | நன்றியுரை | : ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் (செயலாளர், கொ.த.ச) |
| 7.40 | சங்ககீதம் | |
| | நிகழ்ச்சித் தொகுப்பு | : திரு. செ. திருச்செல்வன் (நிதிச்செயலாளர், கொ.த.ச) |



மனிதநேயமானி வி.கயிலாசபிள்ளை, திருமதி.அ.கயிலாசபிள்ளை அவர்களது நிதிக்கொடையினால் தங்குவிடுதியின் ஓர் அறை கட்டி முடிக்கப்பட்டது.



நவாலியூர் 'தங்கத்தாத்தா' நினைவாக பீட்டன் சண்.குகவரதன் அவர்கள் நிதிக்கொடையினை கொழும்பு தமிழ்ச்சங்க தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் அவர்களிடம் கையளிப்பதையும் அருகில் பொருளாளர் திரு.செ.திருச்செல்வன், உப பொருளாளர் திரு.சி.பாஸ்கரா, உறுப்புரிமைச் செயலாளர் திரு.பா.க.மகாதேவா நிற்பதையும் படத்தில் காணலாம்.

இராஜேஸ்வரி கருணை ஆனந்தன் நம்பிக்கை நிதியத்தின் நிதிக்கொடயினை கொழும்பு தமிழ்சங்க தலைவர் முன்னிலையில் திரு.ந.கருணைஆனந்தன் பொருளாளரிடம் கையளிப்பதையும் உப பொருளாளர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.





வேலணை சி.க.சிவசரணம் நினைவாக மகாராசா புட் புரடக்ஸ் நிறுவனத்தின் நிதிக்கொடையினை திரு.சி.குகநாதன் கொழும்பு தமிழ்ச்சங்க தலைவரிடம் வழங்குவதையும் பொருளாளர் , உபபொருளாளர் , நிலையமைப்புச் செயலாளர் மா.சடாச்சரம், முன்னாள் நிலையமைப்புச் செயலாளர் மா.தேவராஜா ஆகியோர் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.


மன்னார் வைத்தியக் கலாநிதி மு.கதிர்காமநாதன் குடும்பத்தின் நிதிக்கொடையினை கொழும்பு தமிழ்சங்க தலைவர் திரு.மு.கதிர்காமநாதனிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்குவதையும் உப பொருளாளர் திரு.சி.பாஸ்கரா அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.






சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டுவிழா பூஜையில் பங்குபற்றியவர்களைக் காணலாம்.








சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற சாந்தி பூஜையின்போது தலைவர், செயலாளர், ஓம்படைச் சபை செயலாளர் திருச்சந்திரன், ஆகியோருடன் பூசையில் பங்குபற்றிய ஆட்சிக்குழு உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.





கட்டடத் திறப்புவிழா பால்காய்ச்சும் நிகழ்வின்போது தலைவர் , செயலாளர் , பொருளாளர் செ.திருச்செல்வன் ஆகியோருடன் பங்குபற்றிய ஆட்சிக்குழு உறுப்பினர்களையும் சங்க நலன்விரும்பிகளையும் படத்தில் காணலாம்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

மெய்ப்பொருள் காண்பதறிவு

மூன்றாம் தளத்தில் புதிதாக அமைத்த 'விருந்தினரகம்'

## திறப்பு விழா அழைப்பிதழ்

காலம் : 24.06.2011, வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி

தலைமை : திரு. மு. கதிர்காமநாதன்
(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

பிரதம விருந்தினர் : திரு. க.அரசரட்ணம்
(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், போக்குவரத்துப் பிரிவு)



மு. கதிர்காமநாதன்
தலைவர்

ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்
பொதுச் செயலாளர்

மா. சடாட்சரன்
நிலைய அமைப்புச் செயலாளர்

---

இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல் - குறள் 517

பொது மண்டபம் திறந்துவைத்தல்

திரு.மு.கதிர்காமநாதன்,

தலைவர்,கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

காலம் : 24.06.2011 மாலை 5.00 மணி

---

ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு - குறள் 231

"தங்கத்தாத்தா அகம்"

'நவாலியூர் சோமசுந்தரப்புலவர்' நினைவாக

அன்பளிப்புச் செய்து திறந்து வைப்பவர்

பூட்டன் திரு. சண். குகவரதன்

காலம் : 24.06.2011 மாலை 5.05 மணி

---

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல் - குறள் 516

"விபுலானந்தர் அகம்"

அன்பளிப்புச் செய்து திறந்து வைப்பவர்

திரு. வி.கயிலாசபிள்ளை

காலம் : 24.06.2011 மாலை 5.10 மணி

---

வினைக்கு உரிமை நாடிய பின்றை அவனை
அதற்கு உரியன் ஆகச் செயல் - குறள் 518

"கம்பர் அகம்"

வேலணை திரு. சி. க. சிவசரணம் நினைவாக
அன்பளிப்புச் செய்து திறந்து வைப்பவர்
திரு.சி. குகநாதன்

காலம் : 24.06.2011 மாலை 5.15 மணி

---

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும் - குறள் 511

"வள்ளுவர் அகம்"

'இராஜேஸ்வரி கருணை ஆனந்தன்
நம்பிக்கை நிதியம்'

அன்பளிப்புச் செய்து திறந்து வைப்பவர்
திரு. ந. கருணை ஆனந்தன்

காலம் : 24.06.2011 மாலை 5.20 மணி

---

கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும் - குறள் - 525

"நாவலர் அகம்"

அன்பளிப்புச் செய்து திறந்து வைப்பவர்
வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன்,
மன்னார்.

காலம் : 24.06.2011 மாலை 5.25 மணி

---

கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும் - குறள் - 525


"நாவலர் அகம்"

அன்பளிப்புச் செய்து திறந்து வைப்பவர்
வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன்.
மன்னார்.

காலம் : 24.06.2011 மாலை 5.25 மணி




தமிழ்ச்சங்கத்தின்
முகப்புத் தோற்றம்




அமரர் தமிழவேள் கந்தசுவாமி அவர்களின்
நினைவு மண்டபம்




இலங்கை நூல்கள் காட்சிப்பகுதியும்
விற்பனைப் பகுதியும்




பத்திரிகை வாசிப்புப் பகுதி



தமிழ்ச்சங்கத்தின் உட்புறத் தோற்றம்



தலைவர், செயலாளர், பொருளாளர்
ஆகியோர் கடமையின்போது



வினோதன் மண்டபத்தின் தோற்றம்



வினோதன் மண்டபத்தில் நடைபெற்ற
ஒரு பொத்தக வெளியீட்டின்போது






கலந்துரையாடலின்போதும்




சங்கரப்பிள்ளை மண்டபத்தின்
நுழைவாயில்



சங்கரப்பிள்ளை மண்டபத்தின் அழகிய தோற்றம்



சங்கரப்பிள்ளை மண்டபத்தின் மேடை அலங்காரத் தோற்றம்



சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்ற 2011ம் ஆண்டு நிறுவனர்தின விழாவின்போது





















சங்கரப்பிள்ளை மண்டபத்தில்
நடைபெற்ற
கலைநிகழ்ச்சிகளும்
பார்வையாளர்களும்





நூலகச் செயலாளர் வைத்திய கலாநிதி ஞானசேகரனுடன் நூலக அலுவலர்கள்



நூலகத்தின் ஒருபக்கத் தோற்றம்



நூலகத்தின் சிறுவர் பகுதியின் தோற்றம்



நூலகத்தின் சட்டப்பகுதியின் தோற்றம்


நூலகத்தின் உசாத்துணைப் பிரிவின் தோற்றம்






சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் நடைபெற்ற பஜனையின்போது



சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தின் படிப்பகப் பகுதி




சட்ட உட்புக வகுப்பு
இலவசக் கருத்தரங்கின்போது




தமிழ்ச்சங்க மேற்பகுதியில் இருந்து
பார்க்கும்போது



நூலகத்தில் நடைபெற்ற சரஸ்வதி பூஜையின்போது தலைவர், செயலாளர், பொருளாளருடன் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் அலுவலர்கள் எடுத்துக்கொண்ட படம்



நவரட்ணசிங்கம் மண்டபத்தின் நுழைவாயில்



இரண்டாம் மாடி விருந்தினர் தங்குமிடத்தின் பகுதி





பணிமனை முகப்புத் தோற்றம்




பணிமனையில் பணியாட்கள்


# அகவை 70 வரை தமிழ்ச்சங்கத்தை அலங்கரித்த தலைவர்கள்



சு. ச. பொன்னம்பலம் முதலியார்
*1942*


அ. சபாரத்தினம்
*1943 - 1946*



க. அருணந்தி
*1947 - 1952*


வே. அ. கந்தையா
*1953 - 1954*


க. மதியாபரணம்
*1955 - 1956*


கலாநிதி க. பொ. இரத்தினம்
*1957 - 1959*


கோ. ஆழ்வாப்பிள்ளை
*1960 - 1962*



மு. வைரவப்பிள்ளை
*1963 - 1965*
*1975 - 1977*



கலாநிதி ஏச். டபிள்யூ தம்பையா கியூ. சி
*1972 - 1974*

# அகவை 70 வரை
# தமிழ்ச்சங்கத்தை அலங்கரித்த தலைவர்கள்


கலாநிதி க. செ. நடராசா
***1978 - 1980***


பொ. சங்கரப்பிள்ளை
***1981 - 1982***


து. தர்மராசா
***1983 - 1984***



நா. மாணிக்கஇடைக்காடர்
***1985 - 1986***


க. அருளம்பலம்
***1966 - 1968***

கு. பாலசிங்கம்
***1969 - 1971***



வ. மு. தியாகராசா
***1987 - 1989***


செ. குணரத்தினம்
***1990 - 1997***


திரு. இ. சிவகுருநாதன்
***1997 - 1999***
***2001 - 2003***


பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
***1999 - 2000***
***2009 - 2010***


# அகவை 70 வரை
# தமிழ்ச்சங்கத்தை அலங்கரித்த தலைவர்கள்




சோ. தேவராஜா
**2001**




கந்தையா நீலகண்டன்
**2003**




திரு. பெ. விஜயரத்தினம்
**2003 - 2005**




திரு. கு. சோமசுந்தரம்
**2005 - 2006**



திரு. இரா. சுந்தரலிங்கம்
**2006 - 2007**



திரு. சி. இ. செந்தில்நாதன்
**2007**



பேராசிரியர் சபாஜெயராசா
**2007 - 2009**



திரு. மு. கதிர்காமநாதன்
**2011**

# கொழும்புத் தமிழ்ச்சங்கம்
# தலைவர்களும் அவர் தம் தலைமைக் காலமும்

| | |
|---|---|
| முதலியார்.க.சு.பொன்னம்பலம் முதலியார் | 1942 |
| திரு.அ.சபாரத்தினம் | 1943 – 46 |
| திரு.க.அருணந்தி | 1947 – 52 |
| திரு.வே.அ.கந்தையா | 1953 – 54 |
| திரு.க.மதியாபரணம் | 1955 – 56 |
| பண்டிதர்.கா.பொ.இரத்தினம் | 1957 – 59 |
| திரு.கோ.ஆழ்வாப்பிள்ளை | 1960 – 62 |
| திரு.மு.வைரவப்பிள்ளை | 1963 – 65 |
| திரு.க.அருளம்பலம் | 1966 – 68 |
| திரு.கு. பாலசிங்கம் | 1969 – 71 |
| திரு.எச்.டபிள்யூ.தம்பையா கியூ.சி | 1972 – 74 |
| திரு.மு.வைரவப்பிள்ளை | 1975 – 77 |
| கலாநிதி க.செ.நடராசா | 1978 – 80 |
| திரு.பொ.சங்கரப்பிள்ளை | 1981 – 82 |
| திரு.து.தருமராசா | 1983 – 84 |
| திரு.நா.மாணிக்க இடைக்காடர் | 1985 – 86 |
| திரு.வ.மு.தியாகராஜா | 1987 – 89 |
| திரு.செ.குணரத்தினம் | 1990 – 97 |
| திரு. இ.சிவகுருநாதன் | 1997 – 1999 |
| பேராசிரியர்.சோ.சந்திரசேகரம் | 1999-2000 |
| திரு.சோ.தேவராஜா | 2001 |
| திரு.இ.சிவகுருநாதன் | 2001-2003 |
| திரு.கந்தையா நீலகண்டன் | 2003 |
| திரு.பெ.விஜயரத்தினம் | 2003 - 2005 |
| திரு.கு.சோமசுந்தரம் | 2005-2006 |
| திரு.இரா.சுந்தரலிங்கம் | 2006-2007 |
| திரு.சி.இ.செந்தில்நாதன் | 2007 |
| பேராசிரியர்.சபா ஜெயராசா | 2007-2009 |
| பேராசிரியர்.சோ.சந்திரசேகரம் | 2009-2010 |
| திரு.மு.கதிர்காமநாதன் | 2010-2011 |




முன்வாசல் அலங்கார வளைவின் மாதிரி



கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நுழைவாயில் அலங்கார வளைவுக்கான முதற்கொடுப்பனவுக்கான காசோலையை திரு.சண் குகவரதன் அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு.மு.கதிர்காமநாதனிடமும் பொருளாளர் திரு.செ.திருச்செல்வனிடம் வழங்குவதையும் அருகில் உதவி நிதிச்செயலாளர் திரு.சி.பாஸ்கரா அவர்களும் திரு.க.மகாதேவா (ஆட்சிக்குழு உறுப்பினர்) அவர்களும் அருகில் நிற்பதைக் காணலாம்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் வழங்கிய சங்கச்சான்றோர் விருது

**2003**

*பண்டிதர் கா.பொ.இரத்தினம்*
*திரு.இ.நமசிவாயம்*
*திரு.ஆ.எம்.பழனியப்பச் செயட்டியார்*

**2004**

*பேராசிரியர் சபா ஜெயராசா*
*திரு.இ.விக்னராஜா*
*பேராசிரியர் சி.தில்லைநாதன்*

**2005**

*திரு.வீ.ஆர்.வடிவேற்கரசன்*
*அல்ஹாஜ் எம்.முஹமட் லாபீர்*
*பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம்*

**2006**

*திரு.கு.நி.டேவிற் பீரிஸ்*
*திரு.எஸ்.செந்தில்நாதன்*
*திரு.ச.சரவணமுத்து*

**2007**

*திரு.அருள்மா இராஜேந்திரம்*
*திரு.வேலணை வீரசிங்கம்*
*திரு.பொன்.வல்லிபுரம்*

**2008**

*தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி*
*திரு.எஸ்.எம்.ஹனிபா*
*திரு.சங்கரப்பிள்ளை நாகேந்திரன்*

**2010**

*திரு.எஸ்.பி.சாமி*

**2011**

*மனிதநேயமாமணி வி.கயிலாசபிள்ளை*
*திரு.செ.கணேசலிங்கம்*
*சமூகஜோதி ச.இலகுப்பிள்ளை*

*பி.கு:- பிறமொழியாளர் ஒருவர் தமிழுக்குச் செய்த தொண்டிற்கு திரு.மடுளுகிரியே விஜயரத்னவிற்கு 2007ம் ஆண்டு சங்கச் சிறப்புச் சான்றோர் விருது வழங்கப்பட்டது.*

# இலக்கிய வடிவங்களும் நிரப்பப்படாத இடைவெளிகளும்

**பேராசிரியர் சபா ஜெயராசா**
*கொழும்புத் தமிழ்ச்சங்க உபதலைவர்*

*இலக்கியம் எது? இலக்கியம் அல்லாதது எது? என்பதற்குத் திட்டவட்டமான பிரிகோடு இடமுடியாத நிலையில் இலக்கியப் படைப்பு "இனங்காணலுக்கு" RECOGNITION மட்டும் உரியதேயன்றி வரையறைக்கும் கட்டுமானத்துக்கும் அப்பாற்பட்டது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. கவிதைகள் என்று சொல்லப்படுவற்றுள் சில கலைப் பண்பை இழந்து நிற்றலையும், விஞ்ஞான எழுத்தாக்கம் என்று சொல்லப்படுபவை சில வேளைகளிலே கலைப் பண்பை உட் பொதிந்து நிற்றலையும் காணமுடிகிறது. அழகியல் தொடர்பான பிரச்சினைகள் இவ்வாறான முரண்பாடான தளங்களிலிருந்து மேலேழுதலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.*

*சீனர்கள் மிகப் பெரிய நாடக மரபைக் கொண்டவர்கள். பெருந்தொகையான நாடகங்களை உலகக் கலைப் பரப்புக்கு வழங்கியவர்கள். அவர்களுடைய கண்ணோட்டத்தில் ஒரு சில நாடகங்களைத் தவிர ஏனையவை கலையாக்கம் குன்றியவை என்றே கருதப்படுகின்றது. ஆனால் தமிழ் மரபில் அனைத்துத் தொல் நாடகங்களும் கலைச் செறிவு கொண்டவை என்ற பெரு நோக்கும் "பழைமையானவை சிறந்தவை" என்ற தரிசனமும் நீடித்த வண்ணமுள்ளன. கலை மதிப்பீட்டிலே பண்பாட்டு காரணிகள் உட்பொதிந்திருத்தலைத் தமிழ் மரபு வெளிப்படுத்து கின்றது.*

*கலையாக்கம் என்பதை வரையறை செய்வதிலே கிரேக்கர்களுடைய சிந்தனைகள் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. இலக்கியம் பொய்ம்மையின் வடிவமாக இருப்பதனால் அதனை மாணவர்க்குக் கற்பிக்கக் கூடாதென வலியுறுத்திய பிளேட்டோ தாம் வகுத்த ஏழுதாராண்மைக் கலைகள் என்ற பாகுபாட்டிலே வரலாற்றுப் பாடத்தையும் உள்ளடக்கினார். அவரது கண்ணோட்டத்திலே வரலாறு என்பது கலைச் செறிவு கொண்டது என்ற அங்கீகாரத்துக்கு உட்பட்டது. மேலும் பிளேட்டொ எழுதிய பெரும் தத்துவ உரையாடல் அனைத்தும் இலக்கியம் என்ற பாகுபாட்டினுள்ளே கொண்டு வரப்படும் செயற்பாடு இலக்கிய ஆக்கம் அல்லது கலையாக்கம் என்பது பற்றிய கட்டுக்கோப்பான வரையறைகளைச் செய்தவிலே இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி யுள்ளன.*

*உலக எழுத்தாக்க வளர்ச்சிகள் இந்த இடர்ப்பாட்டை மேலும் சிக்கலாக்கின. மேலும் விரிவாக்கின. தன்வரலாற்று ஆக்கங்கள், கடிதங்கள், நாட்குறிப்புக்கள் முதலியவற்றையும் இலக்கிய வடிவத்துள்ளே கொண்டு வருதல் கலையின் சிக்கலாகும். இயல்பினை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.*

*இவ்வாறான நிலையிலே மேலும் பல உட்புகல் நிலை தோற்றம் பெற்றது. வாதாடலை* (ORATORY) *அல்லது கருத் தேற்றம் செய்வதற்கு மொழியை வாகாகப் பயன்படுத்தும் செயலை ஒரு கலைச் செயலாகவும், கலைப்படைப்பாகவும் உட்புகுத்தியமை மேலும் உட்கிளறல்களைத் தோற்றுவித்துள்ளது. ரோமர்கள் கவிதை என்ற கலைப் படைப்புக்குக் கொடுத்த அதே முக்கியத்ததுவத்தை வாதாடல் அமைப்புக்கும் வழங்கினார்கள். தமிழ் மரபிலே நாவலர் காலத்திலிருந்த பிரசங்கம் ஒரு கலை என்ற அங்கீகாரத்தைப் பெற்றது. தமிழ் மரபிலே ஏற்றம் பெற்ற பிறிதொரு நிகழ்ச்சி உரையாசிரியர்களின் உரைத் தொகுதிகளையும் இலக்கியம் என்ற வடிவத்தில் உள்ளடக்க முயன்றமையாகும்.*

சமூக வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் தொடர்பாடலில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங் களும் மேலும் பல ஆக்கங்களைக் கலை மற்றும் இலக்கியம் என்ற சட்டகத்திலே உட்புகுத்தத் தொடங்கியுள்ளன. இதழ்களில் வெளிவரும் ஆசிரியரிம்பல் (EDITORIAL) மற்றும் இதழ்க் கீலம் (COLUMN) முதலிய வற்றையும் இலக்கியம் என்பதனுள் அடக்கும் செயற்பாடுகளும் முன்னிறுத்தப் படுகின்றன.

இலக்கியம் என்பதை வரையறை செய்வதற்குரிய இரண்டு கோட்பாடுகள் நெடுங்காலமாக வழக்கில் உள்ளன. அவையாவன:
(1) வெளித்துலங்கற் கோட்பாடு (EXPRESSIVE THEORY)
(2) கட்டுமானக் கோட்பாடு (CONSTRUCTIVE THEORY)

வெளித்துலங்கல் அல்லது எடுத்துரைத்தல் என்ற சிறப்பை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் என்ற அடையாளத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தும், கட்டுமான நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தல் வேண்டும் என்ற முன்மொழிவும் முரண்பட்ட கோணங் களிலே வளர்ச்சி கொள்ளலாயின, கலை யாக்கத்தின் தொழில் நுட்பப் பண்புகள் மீது கட்டுமான நோக்கு அதீத கவனம் செலுத்தலாயிற்று.

இந்நிலையில் இலக்கியம் என்பதை வரையறுப்பதற்கு “இலக்கிய மொழி” என்ற மாற்று அணுகுமுறை முன்னெடுக்கப்பட்டது. இலக்கியம் தனித்துவமான அனுபவத்தைத் தரவேண்டு மாயின் மொழி ஊடகமே குறிப்பிட்ட அனுபவத்தைக் கையளிப்பதால் மொழியாட்சியை அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தின் அழகியற் பெறுமானத்தைத் தீர்மானிக்க முடியும் என்ற கருத்து மேலோங்கியது. இலக்கிய மொழியைப் பொது மொழியிலிருந்து வேறுபடுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இலக்கிய மொழி நுட்பமாகவும், அழகுச் சிக்கல் விளைவுகளை உருவாக்க வல்லதாகவும், பல்வேறு பொருள் கோடல்களுக்கு இட்டுச் செல்வதாகவும் இருத்தல் வேண்டும் என முன்மொழியப் பட்டது. இதனை “மொழி மயங்கியைபு” (AMBIGUITY) என்ற எண்ணக் கருவினால் மேலைப்புலத் திறனாய்வாளர் குறிப்பிட்டனர். வில்லியம் எம்சன் என்பார் இந்த எண்ணக் கரு பற்றிய விரிவான விளக்கங்களை 1930ஆம் ஆண்டிலே முன்வைத்தார்.

அரிஸ்ரோட்டில் நாடக அழகியலுக்குத் தந்த வாய்பாட்டு வடிவத்தை ஏனைய இலக்கிய வடிவங்களுக்கும் பொதுமையாக்கி விட முடியும் என்ற கருத்தை நவ அரிஸ்ரோட்டிலிய வாதிகள் முன்மொழிகின்றனர். அவை:
(அ) அளிக்கை
(ஆ) வளர்ச்சி
(இ) சிக்கலாகும் தன்மை
(ஈ) நெருக்கீடு
(உ) நெருக்கீட்டுக்கான தீர்வு

ஆனால் நாடக அழகியலுக்குரிய சிறப்பார்ந்த பரிமாணமாகிய நேரம், இடம், வினைப்பாடு ஆகியவற்றின் கூர்ந்த இணைப்பை அந்த வாய்பாடு கவனத்துக்கு எடுக்காது விட்டமை குறிப்பிடத்தக்கது.

இலக்கிய ஆக்கமும் அதன் அழகியற் பரிமாணங்களும் எடுத்தாளப்படும் குறியீடுகளாலும், தொன்மங்கள் சார்ந்த விளைவுகளை (MYTHICAL EFFECTS) உள்ளடக்குதலால் வளர்ந்து மேலெழுகின்றன என்ற கருத்தின் வலியுறுத்தல் கார்ல்யுங்கினுடைய தொன்மம் பற்றிய ஆய்வுகளை அடியொற்றி எழுச்சி கொள்ளலாயின. மனிதரது கூட்டு நனவிலிமனத்தின் திரட்டுக்களாக தொன்மங்கள் அமைதலை அவர் உளப்பகுப்புக் கண்ணோட்டத்தில் விளக்கினார். தமிழ் இலக்கியப் பரப்பிலே தொன்மங்களின் எடுத்தாள்கை நீண்ட காலமாக இடம் பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது.

சமூக இயல்பை நேரடியாகத் தெறித்துக் காட்டும் புறவய ஆவணப்படுத்தல் இலக்கியக் கவிப்பினுள் அடங்கமாட்டாது. அக உணர்வுகளும், மனவெழுச்சிகளும், உளவியல் மிதத்தலும், அருவ நிலையான நெருடல்களும், மனவிசும்பிலே அகநிலை நகர்வுகளை ஏற்படுத்தித் தருதலும் “இலக்கியமாக்கலை” (LITERARYNESS) முன்னெடுத்துச் செல்லும். ஆனால் அதீத இலக்கிய மயமாக்கற் செயற்பாடுகள் இலக்கிய வரலாற்றுக் காலங்களிலே முன்னெடுக்கப் பட்டமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அவன் காட் (AVANT GARDE) என்னும் விசும்பு முன்னோடி எழுத்தாக்கங்கள் அதீத இலக்கியமாகக் கற்செயற்பாடுகளை முன்னெடுத்தன.

ஆங்கில இலக்கிய மரபிலே பத்தொன்பதாம நூற்றாண்டில் கலைச் சரத்துக்குள் சரண் புகுந்தவர்களாக ஒஸ்கார் வைல்டு மற்றும் வால்டர் பீட்டர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களின் உரைநடை “சிங்காரச் சோடிப்பு” (FLOWERY PROSE) எனப்பட்டது. கலை கலைக்குள்ளே மட்டும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் என்ற முன்மொழிவு கலை வழியாக முன்னெடுக்கப்பட வேண்டிய உயரிய கருத்தியல் தரிசனத்தை முடமாக்கி விடுகின்றது. கலை யாக்க முயற்சியிற் கருத்துத் தரிசனத்தைக் கைவிடலும் இலக்கியமாக்கப்படலைப் பாதிப்படையச் செய்துவிடும். கலைப் பண்பைச் சிதறடிக்காத சார இலக்கியங்கள் வெற்றொலிப்புக்களாகின்றன.

இலக்கியம் என்பது கலை ஆனால் அதனை ஆக்குதல் என்பது ஒரு நுண்வினை (CRAFT) ஒவ்வோர் இலக்கிய வடிவமும் அவற்றுக்குரிய நுண்வினையை உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப காலங்களிலே அந்த நுண்வினைச் செயல்கள் செய்யுளுக்கும் நாடக ஆக்கத்துக்கும் உரியவையாகக் கொள்ளப்பட்டன. நாடக வளர்ச்சியில் கதையை வளர்த்துச் செல்வதற்கு முரண் விசை அல்லது முரண்பாத்திரத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்திலே முன்னரே தீர்மானிக்கப்பட்ட அமைப்புப் (PREDETERMIND STRUCTURE) பற்றிய பிரச்சினை மேலெழுந்தது. எடுத்துக் காட்டாக உற்றெழும் கவிதை அனுபவத்தை ஏற்கனவெ வரையப்பட்ட யாப்புக் கட்டமைப்புக்குள் முடக்கி விடுவதா அல்லது உடைத்து மீறிச் செல்வதா என்ற பிரச்சினை எழுந்தது. அவ்வாறான மீறலே ஐரோப்பிய இலக்கிய வரலாற்றிலே “ரொமான்டிசம்” என்ற கற்பனை உற்றெழலியலைத் தோற்றுவித்தது. இவ்வாதம் வடிவம் இல்லாமையின் (FORMLESSNESS) மகிழ்நிலை ஆரவாரத்தைத் தூண்டியது. வில்லியம் பிளேக் மற்றும் வால்ட் விட்மன் ஆகியோர் தமக்கே உரிய வடிவங்களை ஆக்கிக் கொண்டனர். தமிழ் மரபிலே “எழுத்து” இதழிலிருந்து இது உணர்வு பூர்வமாக மேலேழுந்தது.

சமூக வளர்ச்சியின் போது சமூக அடுக்கமையின் அடிமட்டங்களுக்குரிய இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்களாகின. அவற்றிலிருந்து வளர்ச்சி கொண்டு மாறுபட்டு நிற்பவை எழுகுழாத்து (ELITE) இலக்கியங்களாகும். நிலமானிய சமூகத்தில் நாட்டார் இலக்கியங்களே வெகுசன (POPULAR) இலக்கியங்களாக இருந்தன. அவை சமூகத்தின் அடிநிலை மக்களிடத்திலிருந்து முகிழ்த்தெழுந்தன. ஆனால் தற்போது வெகுசன இலக்கியத்தை எழுகுழாத்தினலே உருவாக்கிப் பரவ விடுகின்றனர். வெகுசனக் கலை இலக்கியங்களை ஆழ்ந்து ஊடுருவி நோக்கும் பொழுது சமூகத்தளமும் தனிமனித இருப்புமே மீள் பரிசீலனைகளை நோக்கி மேலெழுகின்றன.

இலக்கிய ஆக்கம் ஓர் உற்பத்திப் பொருளாக மட்டுமன்றி இலாபமீட்டும் பண்டமாகவும் (COMMODITY) பின்னைய முதலாளிய வளர்ச்சியிலே எழுச்சி கொண்டுவருகின்றது. கோள மயமாக்கலும், சமகாலத்தில் நிகழ்ந்து வரும் எண்ம (DIGITAL)ப் புரட்சியும் இலக்கிய உற்பத்தியில் மேலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன. கோளமயமாக்கலிலும் எண்மப் புரட்சியிலும் பெரும் முதலாளியம் பின்னணியிலிருப்பதைத் திரிபுபடுத்திக் காட்டும் இலக்கிய ஆக்கங்களும், திறனாய்வு முயற்சிகளும் மேலோங்கி வருதலை மனங்கொள்ளவேண்டியுள்ளது. ஒற்றைப் பரிமாண அழகியலையும் பொழுதுபோக்குச் சுவையையும் வலியுறுத்தும் திறனாய்வாளர் அவற்றின் உள்ளீடான நோக்கற் பின்னணியைக் குறிப்பிடத்தவறி விடுகின்றனர். அந்நிலையில் இலக்கியக் கருத்தியலைப் பிரித்தறியும் தேவை விரைந்து மேலேழுகின்றது.

# பாயிரப் படைப்பு: வள்ளுவர் வழியில் கம்பன்

க. இரகுபரன்
மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
(கொழும்புத் தமிழ்ச்சங்க பதிப்புத்துறைச் செயலாளர்)

தமிழ்க் கவிதைச் சாம்ராச்சியத்தின் சக்கரவர்த்தி கம்பன் ; அதன் தலைமை அமைச்சர் வள்ளுவர்.

"அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை"

கம்பன், கவிதையுலகிலே திக்விஜயம் செய்து, புலம்தோறும் சென்று வென்று செழித்தவன். செல்லும் புலம் எதுவாயினும் அவன் ஒருபோதும் வள்ளுவர் காட்டிய அறவழியினின்றும் அகன்றதில்லை. கம்பகாவிய வெற்றியின் இரகசியங்களுள் அது பிரதானமான ஒன்று.

அந்த இரகசியம் கம்பன் காவியத்தில் ஆழ்ந்து ஈடுபடும் போது பரகசியமாகி விடுகின்றது. காவியத் தொடக்கத்திற்கூட அதனைக் கண்டுகொள்ளலாம். நூல் ஒன்றைக் கடவுள் வாழ்த்துடன் தொடங்கும் முறைமையைத் தமிழுலகுக்கு வகுத்துக்கொடுத்த சூழ்ச்சிக் கிழவர் வள்ளுவரே. கடவுள் வாழ்த்தோடு வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்பவற்றையும் கூட்டி அவற்றைப் பாயிரம் எனப் பண்ணியவரும் அவரே.

அவர் அவற்றை ஏன் அவ்வாறு வகுத்தார் என்பது சிந்தனைக்குரியது.

கடவுளது அருளின் வெளிப்பாடாகவே மழை கருதப்படுகின்றது. அன்றியும், மழையின்றேல் கடவுள் வழிபாடு இயலாததாகிவிடும்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

அதுபோலவே கடவுள் வழிபாடு இல்லையேல் மழை இல்லை என்பதும் மரபு.

"முன்னவார் கோயில் பூசைகள் முட்டிடின்
....... வாரி வளம் குன்றும் (திருமந்திரம். 13)

மழை இல்லையானால் உலகம் ஒழுக்கம் குன்றிவிடும்.

"நீரின்றமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வானின்றமையாது ஒழுக்கு"

மறுதலையாக, உலகில் ஒழுக்கம் நிலை பெறும்போதே மழை பெய்யும் என்பதும் உண்மை.

"வேதம் ஓதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக்கு ஓர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர்மழை
மாதம் மூன்று மழை எனப் பெய்யுமே" (விவேக சிந்தாமணி)

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை" (ஔவையார்)

ஆகவே மழை, கடவுள் வழிபாடு, அறம், ஒழுக்கம் என்பவற்றுக்கிடையே தாதான்மிய சம்பந்தம் - இன்றியமையாத் தொடர்பு - இருப்பது தெரியவரும்.

இறையடியாரையும் இறைநிலையில் வைத்துப் போற்றுவது வேதமரபு.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" (சிவஞானபோதம்)

இவ்வாறானதொரு ஒருமைப்பாட்டுணர்வினாலேயே வள்ளுவனார், கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கினையும் பாயிரத்துள் ஒன்றாய் அடக்கிப் பகர்ந்தார் எனக் கொள்ளலாம்

வள்ளுவர் வகுத்த இவ்வழியைப் பின்வந்த தமிழ்க் கவிஞர்களுள் கம்பனளவுக்குப் பின்பற்றியவர்கள் பிறர் எவரும் இருப்பதாகப் புலனாகவில்லை. கம்பன், வள்ளுவர் வழியை அடியொற்றினானாயினும் காவிய வடிவைக் கையாண்ட வாய்ப்பினால் உசிதமான சில மாற்றங்களை மேற்கொண்டு தற்புதுமையும் காட்டினான். உவமை முதலாம் அணிநலமும் கூட்டினான்.

நூலின் தொடக்கத்தில் - நூலின் புறத்தே கடவுளை வாழ்த்தி, நீத்தாரை வாழ்த்தி , நூலின் அகத்தே காவியத் தலைவனது நாட்டின் வளங்கூறும் பாங்கிலேயே வான் சிறப்பையும் அறன் வலியுறுத்தலையும் அமைத்து, இவற்றுக்கிடையே, அவையடக்கமும் கூறும் திறம் கம்பனது தற்புதுமை.

வள்ளுவர் வாழ்த்திய கடவுள் பேதமற நிமிர்ந்த பொதுமைக் கடவுள்; எம்மதத்தார்க்கும் சம்மந்தமான கடவுள். உலகு தழுவிய நோக்குடன்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்றவாறு 'உலகு' என்ற சொல்லையும் உட்பொதிந்தமைந்த குறளை முதலாகக் கொண்ட பத்துக் குறள்களால் வள்ளுவரின் கடவுள் வாழ்த்து அமைந்தது. கம்பனும் வள்ளுவரை அடியொற்றியே சமயங்கடந்த பரநிலையிலே கடவுளைக் காண்கிறான். வள்ளுவரின் உளப்பாங்கை உணர்ந்தவனாய், உலகு தழுவிய நோக்கினனாய்க் கடவுளை

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே."

எனப்பணித்தான்.

கம்பராமாயணப் பாயிரத்துள் அமைந்த இரண்டாம் மூன்றாம் செய்யுள்கள் 'நீத்தார் பெருமை'யாக அமைவன. சிற்குணத்தராகிய ஞானியரை – பற்றிலாரை – நீத்தாரை நினைந்தேத்துவன.

"சிற்குணத்தர் தெரிவரு நல்நிலை
எற்கு உணர்த்த அரிது எண்ணிய மூன்றினுள்
முற்குணத்தவரே முதலோர் அவர்
நற்குணக்கடல் ஆடுதல் நன்றரோ."

"ஆதி அந்தம் அரி என யாவையும்
ஓதினார் அலகு இல்லன உள்ளன
வேதம் என்பன மெயந்நெறி நோன்மையன்
பாதம் அல்லது பற்றிலர் - பற்றிலார்."

கடவுள் வாழ்த்தையும்,

நீத்தார் பெருமையையும் அமைத்துக்கொண்ட கம்பன்,

உணர்த்திய பணிவுடைமை, இனியவை கூறல் முதலாம் நற்குணங்களாலமைந்த 'அவையடக்கம்' தெரிவித்து, நேரே காவியத்துள் இறங்கி, அங்கே 'வான் சிறப்பு'ப் பேசுதற்கும் அப்பேச்சில் அமைந்த உவமை முதலாம் அணிகளூடாக 'அறன்வலியுறு'த்துவதற்கும் முற்படுகிறான். அவற்றுக்காயமைந்த முகவுரையிலேயே 'அறம் வலியுறு'த்தத் தொடங்கி விடுகிறான். அம்முகவுரை,

"ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்

காசு அலம்பு முலையவர் கண் எனும்

பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக்

கோசலம் புனை ஆற்றணி கூறுவாம்."

காவிய நாயகனின் நாட்டிலுள்ள ஆடவரும் பெண்டிரும் அறத்தினின்றும் விலகாதவர்கள் என்பது இதன் தாற்பரியம். அத்தகைய நாட்டை அழகு செய்கின்ற சரயு நதியினை வருணிப்பாம் என்று வான், சிறப்புக்கு முகம் செய்கிறான் கம்பன். அடுத்த அடுத்த பாடல்களிலே வான் சிறப்பும் அதன் வழிபெருகும் ஆற்றின் சிறப்பும் எடுத்துரைக்கும் கம்பன், அவ்வெடுத்துரைப்புக்களுக்குச் சிறந்த அணிகளை - விசேடமாக உவமை அணிகளைக் கையாளுந் திறன் சிலாகித்தற்குரியது.

வெண்முகில்கள் கடல்நீரைப் பருகிக் கருக்கொண்டு மழை மேகமாக மாறுவதை வருணிக்கிறான் கம்பன். நீறணிந்த மேனியனாய் வெண்மயமாகக் காட்சியளிக்கும் சிவன் வெண்முகிலுக்கும், கருமேனியம்மானாகிய திருமால் கருமேகத்துக்கும் உவமையாகிறார்கள்.

"நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்

ஆறு அணிந்து சென்று, ஆர்கலி மேய்ந்து, அகில்

சேறு அணிந்த முலைத்திரு மங்கைதன்

வீறணிந்தவன் மேனியின் மீண்டவே"

உவமையணியின் நோக்கங்களுள் பிரதானமான ஒன்று அறிந்தது கொண்டு அறியாததை விளக்குதலாகும்.

யாவராலும் அறியப்பட்ட வெண்மேகம், கருமேகங்களைக் கொண்டு அறிதற்கரியவர்களான கடவுளாரை விளக்குவதை விடுத்து, அறிதற்கரிய கடவுளரைக் கொண்டு யாவரும் அறிந்த முகில்களை உணர்த்த முற்படுவது போன்ற இத்தகு

உவமைகளை 'விபரீத உவமை' என்று அணியிலக்கண நூலார் வகைப்படுத்துவர்.

வழமையாக உவமானங்களாகக் கையாளப்படும் விடயங்களை உவமேயமாக்கிக் கூறுவதாலேயே இத்தகு உவமைகள் 'விபரீத உவமை' எனப்பட்டன. (விபரீதம் - வழமைக்கு மாறானது).

மழையை வருணிப்பதற்கு விபரீத உவமையை முதன்முதலிற் கையாண்டவன் கம்பனல்ல. அவனுக்குப் பல நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்தவர்களும் கம்பனால் நன்கு அறியப்பட்டவர்களுமாகிய மாணிக்கவாசகரும்

ஆண்டாளும் மழையை வருணிப்பதற்காக, இதேபாங்கில், விபரீத உவமையைக் கையாண்டிருக்கிறார்கள். மழைவளம் பெறுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு பண்டைத் தமிழகத்துப் பெண்டிரால் நோற்கப்பட்ட பாவை நோன்பை அனுசரித்தவகையில் அவர்களாற் பாடப்பட்ட திருவெம்பாவையிலும், திருப்பாவையிலும் அவ்விபரீதத்தைக் காணலாம்.

மாணிக்கவாசகரின் வேண்டுதலில் அமைந்த மழை வருணணை இது:

"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து, உடையாள்

என்னத் திகழ்ந்து, எம்மை ஆளுடையாள் இட்டிடையின்

மின்னிப் பொலிந்து, எம்பிராட்டி திருவடிமேல்

பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலைகுலவி, நந்தம்மை ஆளுடையாள்

தன்னிற்பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு

முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே

என்னப் பொழியாய் மழை ஏலோரெம்பாவாய்."

இங்கு, கருமையின் ஒருமை கருதி சிவனிடத்தினின்றும் பிரிவிலாதவளான அருட்சக்தி மழைமேகத்துக்கு உவமையாகிறான்

ஆண்டாளின் அருளிச் செயல் இது

"ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்

ஆழியுட் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி

ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து

பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்

ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து

தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்

வாழ உலகினிற் பெய்திடாய், நாங்களும்

மார்கழிநீர் ஆட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்."

ஆண்டாளின் மழை வருணனைக்கு உவமையாகிறான் கரியநிறத் திருமால்.

வைதீக நெறியின் இருபெரும் பிரிவுகள் சைவமும் வைணவமும், முழுமுதற் கடவுளாகச் சைவர்கள் சிவனையும்

வைணவர்கள் திருமாலையும் கொள்வர். அந்த இரு மரபுகளும் தத்தமக்கெனத் தனியான தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டிருப்பினும் பெரும்பாலும் ஒத்த தன்மை உடையனவே. ஆனால் மதவாதிகள் ஒருமைப்பாட்டை நோக்காது வேறுபாடுகளுக்கே முதன்மை கொடுத்ததால் இரண்டும் முரண்பட்டு வளர்ந்துவந்தன. கம்பன் காலத்தில்

அரச மட்டத்திலும் அதன் பாதிப்பு வெளிப்பட்டமைக்குத் தமிழக வரலாறு சான்று பகரும். பொறுமை

நோக்கினனான – உலகக் கவிஞனான – கம்பன், மதங்கொண்டு நின்ற அத்தகையவர்களை அறிவிலோர்

என்றான். காண்டங்கள் பல கடந்து கிட்கிந்தா காண்டத்திலே, சீதையைத் தேடித் தென்திசை செல்லும் வானர

வீரர்க்கு வழியுரைக்கும் சுக்கிரீவன் கூற்றிலே வைத்துக் கூறுகிறான்:
"அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன்"

என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்

பரகதி சென்று அடைவரிய பரிசேபோல்,

புகல் அரிய பண்பிற்று ஆமால்

சுர நதியின் அயலது, வான்தோய் குடுமிச்

சுடர்த் தொகைய, தொழுதோர்க்கு எல்லாம்

வரன் அதிகம் தரும் தகைய, அருந்ததியாம்

நெடுமலையை வணங்கி அப்பால்"

அடைதற்கரியதும் தொழுதோர்க்கெல்லாம் அதிக வரம் தருவதும் அருந்ததி என்னும் பெயருடையதுமான

நெடுமலையொன்று வழியிலே தோன்றும், அதனை வணங்கிச் செல்லுங்கள், என்று கூறும் கம்பன் அத்தகைய

அருந்ததி மலைக்குக் கூறும் உவமையும் விபரீதமானதே என்பது இங்கு கவனிக்கத்தக்கது. 'சிவனே பெரியவன்',

'இல்லை திருமாலே பெரியவன்' என்று சண்டை போடும் அறிவிலிகளுக்குப் பரகதி கிட்டுவதில்லை.

அதுபோலவே அருந்ததி மலையும் அடைதற்கரியது என்றவாறு அமைகிறது அந்த விபரீத உவமை.
அது அவ்வாறாக, மணிவாசகரும், ஆண்டாளும் மழைக்குக் கையாண்ட தெய்வநலம் வாய்ந்த உவமையைக் கம்பன் மிகச் சுருக்கமாக அதேவேளை தன் சமரச நோக்கு நன்கு புலப்பட அமைத்துக் கொண்ட திறத்தை உணர்ந்து அப்பாற் செல்வோம்.

மழை வருணனைக்குக் கம்பன் கையாண்ட மற்றோர் உவமையை இனி நோக்குவோம். அதுவும் விபரீதமானதே.

பொன்மயமான இமயமலையிலே மழை பொழிகின்றது. மழைத்தாரை ஒவ்வொன்றும் மலையிலுள்ள பொன்னைத் தோண்டி எடுப்பதற்கு வானம் கையாளும் தோண்டு கருவிபோலத் தோற்றமளிக்கிறது (இது தற்குறிப்பேற்றம்).

வழங்குகிறது. எவ்வாறெனின் தம்மிடமுள்ள பொருள் யாவற்றையும் மனமுவந்து வழங்குகின்ற வள்ளல்கள் மேகமானது தன்னிடத்திருந்த நீர் முழுவதையும் கொட்டுகின்றது.

மேகத்தை வள்ளல்களுக்கு

உவமிப்பதே

வழமை.

இங்கு மாறாக மேகத்துக்கு வள்ளல்கள்

உவமிக்கப்படுகிறார்கள். இம்மழை வருணனையால், கம்பன், கொடை என்னும் அறத்தையும் வலியுறுத்தினான் என்க. இக்கவிதையைப் பார்த்தபோது அவன் தன் புரவலன் சடையப்ப வள்ளலையும் உள்ளிருப்பான் போலும். பொழிந்த மழை வெள்ளம் பெருகியோடுகின்றது. எவ்வாறு பெருகியது? மானத்தோடு கூடி, தருமத்தைக் கவனித்து, நீதி நெறியிலே நடக்கும் தண்ணளிமிக்க அரசன் ஒருவனது புகழ்போலப் பெருகியது (இதனால் கம்பன் அரசர்க்குரிய அறத்தை வலியுறுத்தினான்). ஞான வழியை நாடுகின்ற நால்வேத நெறிநின்ற அந்தணர்களுக்கு வழங்குகின்ற தானத்தின் பலன்போலப் பெருகியது (இதனாலும் கம்பன் கொடையறத்தை வலியுறுத்தினான் போலும்).

"தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

"தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்"

எனும் குறள்கள் இங்கு சிந்திக்கத் தக்கன.

வெள்ளப் பெருக்குக்குக் கம்பன் கையாளும் மற்றோர் உவமை சிலேடையும் கலந்த விபரீதமானது. மலையின் உச்சி, இடை, அடிவாரம் ஆகிய எல்லா இடங்களையும் தழுவி அவ்வளவில் நில்லாமல் மலையிலுள்ள எல்லாப் பொருள்களையும் வாரிச் செல்கிறது வெள்ளம். அது மலையிலே சிறிதுநேரமே தங்கிநிற்கும். இக்காரணங்களால் தம்மிடம் ஏமாந்த காமுகரிடம் இவ்வாறாகவே நடந்து கொள்ளும் வேசியர்கள், வெள்ளப் பெருக்குக்கும் விபரீத உவமையாகிறார்கள் (இதனால் கம்பன் வரைவின் மகளிர்ச் சேராமை, கற்புடைமை முதலாம் நல்லறங்களை வலியுறுத்துகிறான் என்க). பாடல் வருமாறு:

"தலையும் ஆகமும் தாளும் தழீஇ, அதன்
நிலை நிலாது, இறை நின்றது போலவே,
மலையின் உள்ள எலாம் கொண்டு மண்டலால்,
விலையின் மாதரை ஒத்தது அவ்வெள்ளமே."

கம்பனின் மழை வெள்ளப் பொருக்குக்கு வணிக மாக்களும் விபரீத உவமையாகிறார்கள். அதன்மூலம் கம்பன் 'பொருள் செயல் வகை' முதலாம் அறங்களை வலியுறுத்தினான் போலும்.

"மணியும், பொன்னும், மயில் தழைப் பீலியும்,
அணியும் ஆனை வெண்கோடும், அகிலும், தண்
இணையில் ஆரமும், இன்னகொண்டு ஏகலான்
வணிக மாக்களை ஒத்தது அவ்வெள்ளமே."

மணி முதலானவற்றை அடித்துச் செல்லும் வெள்ளத்திற்கு வணிகமாக்களை உவமை கூறிய திறம் நயக்கத்தக்கது.

பாடவிருக்கும் காவியத்தின் பிற்பகுதியில் நிகழும் நிகழ்ச்சியொன்றின் அடிப்படையிலும் கம்பன் ஒரு விபரீத உவமையைக் கையாள்கிறான். கற்களை உருட்டியும் மரங்களைப் புரட்டியும் இலை, குழை முதலானவற்றை ஏந்திக் கொண்டும் பெருகும் வெள்ளத்துக்கு, சேதுபந்தன காலத்திலே திரண்டிருந்த உறுதி வாய்ந்த வானரசேனை வெள்ளம், விபரீத உவமையாகின்றது. அவ்வானரங்களும் கல்லையும் மரங்களையும் பிறவற்றையும் உருட்டியும் புரட்டியும் தொழிற்பட்ட பாங்கால் சிலேடையுவமையும் விபரீத உவமையும் ஆகிறது அவ்வுவமை. மழைநீத்தம் போலவே வானரக் கூட்டத்தையும் நீத்தமாக உருவகிக்கும் திறமும் நயக்கத்தக்கதே (இதனால் கம்பன் வினைத்திட்பம் முதலாம் அறங்களை வலியுறுத்தினான் போலும் - குரங்கை நிலையுடைக் கவி என்றமை காண்க). பாடல் இதோ

"மலை எடுத்து, மரங்கள் பறித்து, மாடு
இலை முதல் பொருள் யாவையும் ஏந்தலான்
அலை கடல் தலை அன்று அணை வேண்டிய
நிலையுடைக் கவி ஒத்தது அந் நீத்தமே."

வெள்ளத்திலே மலர் முதலானவையும் மிதந்து வருவதனால் ஈயும் வண்டும் மொய்க்கின்றன. வெள்ளம் எல்லை கடக்கின்றது வேகங் கொள்கின்றது; கலங்கித் தெளிவற்றிருக்கிறது; தேக்குமரங்களை முறித்தெறிந்து வருகிறது; இத்தகைய வெள்ள நீருக்கு கள் நாற்றத்தால் ஈக்களும் வண்டுகளும் மொய்க்க, மதுமயக்கத்தால் ஒழுக்க வரம்புகளைக் கடந்து, உற்சாகங்கொண்டு, மனத் தெளிவு இழந்து புளித்த ஏப்பம் விட்டுக் கொண்டு கிடக்கும் கட்குடியர்கள் சிலேடை கலந்த விபரீத உவமையாகிறார்கள்.

"ஈக்கள் வண்டொடு மொய்ப்ப, வரம்பு இகந்து
ஊக்கமே மிகுந்து, உள்தெளிவு இன்றியே,
தேக்கு எறிந்து வருதலின் தீம்புனல்
வாக்கு தேன்நுகர் மாக்களை மானுமே"

(இதனால் கள்ளுண்ணாமை என்னும் அறன் வலியுறுத்தப்பட்டதென்க).

மலைமேற் பொழிந்த மழைத் தாரைகள் வெள்ளமாகப் பரவியோடி, பின் திரண்டு சரயு என்னும் ஆறாக உருப் பெற்றது. அது சூரியகுலத்துதித்த எண்ணற்ற வேந்தர்கள் பாதுகாத்து வந்த நல்லொழுக்கத்தின் தன்மையை ஒத்த ஒழுக்கத்தினை – ஓட்டத்தினைக் – கொண்டதாக உலகத்து உயிர்க்கெல்லாம் உயிர் கொடுக்கும் தாய்முலை என்னும்படியாக ஓடத்தொடங்கியது.

கடலிற் சென்று கலப்பது வரையிலான சரயு நதியின் ஓட்டத்தையும் கம்பன் பல பாக்களிற் பாடுகிறான். அவையும் பொருளாலும் அழகாலும் சிறந்து கவி வெள்ளமாகவே பரவுகின்றன. ஆற்றை அணிசெய்வதற்கும் கம்பன் பெரிதும் விபரீத உவமையையே விரும்பிக் கையாள்கிறான். அவற்றையெல்லாம்

விரிக்கின் இக்கட்டுரையும் கட்டுடைத்த வெள்ளம் எனவே விரியுமாதலால், விபரீத உவமையோடு நிறைவாய் அமைந்த இரு செய்யுள்களை மாத்திரம் நோக்கி இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

இமயமலையிலே பிறந்த சரயு கடலிலே சென்று கலக்கின்றது. அதற்கிடையே கிளையாறுகளாய்ப் பிரிந்தும் ஏரி, குளங்களிற் கலந்தும் சரயு என்னும் முன்னைப் பெயராலன்றி வேறு வேறு பெயர்களாற் சுட்டப்படலாயிற்று. இவ்விடயத்தைச் சொல்வதற்குக் கம்பன் கையாளும் விபரீத உவமை மரபானது; கம்பனுடைய சமரச நோக்கை உணர்த்துவது. அளவிடற்கரிய பெருமைமிக்க வேதங்களாலும் இப்படிப்பட்டது என்று அளவிட்டுச் சொல்வதற்கு அரியதான பரம்பொருளை ஒத்தது இச்சரயு என்னும்படியாக சரயு நதி விளங்கிற்று என்கிறான் கம்பன். பரம்பொருள் ஒன்றேயாய் இருக்கவும் பரந்த ஆராய்ச்சிகளை உடைய பல பெரிய சமயங்களும் அப்பரம் பொருளை வேறுவேறாக – பலபடச் சொல்லுகின்றன. அதுபோலவே சரயு ஒன்றேயாய் இருக்கவும் வேறு வேறு இடங்களில் வேறு பெயர்களைப் பெறுகின்றது. இவ்வாறாகப் பொருள்படும்படியமைந்த விபரீத உவமையோடு கிடக்கும் கம்பன் கவி இது.

“கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
‘எல்லையில் மறைகளாலும் இயம்ப அரும் பொருள் ஈது’ என்ன
தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்ததன்றே.”

கிளை ஆறுகளிலும் ஏரி குளங்களிலும் (பரம்பொருளைப் பலவாறு சுட்டப்படுவது போல) பலபடக் கிடந்த சரயு அவ்வளவில் அமையாது வாய்க்கால்களூடாக ஓடியும் மண் துணிக்கை தோறும் ஊறியும் அவற்றினூடாக,

“தாதுகு சோலைதோறும், கண்பகக் காவு தோறும்,
போதவிழ் பொய்கைதோறும், புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனம் தொறும், வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாயது அன்றே.”

உலகத்தில் உள்ளனவாகக் கூறப்பட்ட உயிர் வர்க்கத்தின் உடல்தோறும் உயிர் உலாவுவதுபோல, சோலை முதலான யாவற்றுள்ளும் சரயு ஊடுருவி உலாவியது. உடலில் உயிர் புகுவதால் உடல் உயிர்ப்புடன் விளங்குவதுபோல சரயுவால் சோலை முதலானவை செழித்து விளங்கின என்பது இச்செய்யுளின் தாற்பரியம். அது மட்டுமன்றிப் பரம்பொருளை ஒத்ததான சரயு, பரம்பொருள் போலவே உயிர்க்குயிராக விளங்குகின்றது என்ற விசிட்டாத்துவைத உண்மையைக் கம்பன் உணர்த்தினான் எனக் கொள்ளினும் பொருந்துவதேயாம்.

## நன்றி நவிலல்

கொழும்புத் தமிழ்ச் சங்க கட்டடப் பூர்த்தி விழாவின் போது நிலையமைப்புக் குழுவின் 3வது வெளியீடான இக்கோபுர கட்டட திறப்பு விழா மலருக்கு ஆசிச் செய்திகள் தந்த பெரியோர்களுக்கும் கட்டுரைகளை வழங்கி மலரை சிறப்பித்த அணைவருக்கும் இம்மலரை வடிவமைத்து குறுகிய காலத்தில் அச்சிட உதவிய ஹரே நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.


இம்மலருக்கான ஆசிச் செய்திகள், படங்கள், கட்டுரைகளை சேகரித்து அயராது பாடுபட்டு உதவிய மலர் ஆசிரியர் திரு.சி.பாஸ்க்கரா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இம்மலர் எழுத்துப் பிழையின்றி வெளிவர ஒப்பு நோக்கிய பதிப்புத்துறைச் செயலாளர் திரு.க.இரகுபரன், திருமதி வசந்தி தயாபரன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

தமிழ்ச் சங்க விருந்தினராக திறப்பு விழா மலராக இக்கோபுரம் வருதையிட்டு எல்லாம் வல்ல இறையருளுக்கும் நன்றி கூறி விடைபெறு கின்றோம்.

வாழ்க தமிழ்ச் சங்கம் வளர்க அதன் பணிகள்.


**ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**
பொதுச் செயலாளர்.





Sangeetha
Jewels
SINCE 1984
335C, Galle Road, Wellawatte, Colombo-06.
Tel: 2500682, 2361321, E-Mail: sangee335@Yahoo.com


திருமண முகூர்த்த பட்டாடைகளுக்கு
JEYECHANDRANS
The Art of Fashion
Chhaya
No.433,Galle Road,Wellawatte,Colombo-06.
Tel : +94 11 4528438 / 5 Fax : +94 11 2362822
E.mail : info@jeyechandrans.com Web : www.jeyechandrans.com
Brintha





தமிழ்ச்சங்கத் தலைவர் அடிக்கல் நாட்டுவதையும்,
வைத்தீஸ்வரக் குருக்கள் தலைவர், செயலாளர், உதவிப் பொருளாளர்
ஆகியோருக்கு ஆசி வழங்குவதையும் காணலாம்



சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தின் கால்கோள் விழா 2005